பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

A/L - 90
இரசாயனவியல்
II வது புதிய பிரிவு
அலகு I - ஆரம்பம்
BY:
திரு. சண்முகசுந்தரம்
(வாரத்தில் 3 மணி நேர வகுப்புகள்)
எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்
இருபாலை, கோப்பாய்.

உதயன்

விலை ரூ 2/.

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

A/L - 90
அளவையியல்
திரு. விக்கி
சனி, ஞாயிறு - 7 00 a.m.
அரசியல்
திரு. மலீறாப்
சனி, ஞாயிறு - 6.00 a.m.
எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்
இருபாலை, கோப்பாய்.

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஸ்ரீ ஆடி மீ 20 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ் பிறை 20 ( 04 - 08 - 1988 ) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 148

# அமைதிப் படை - புலிகள் தகராறு விரைவில் முடியும்

## ஜே. ஆரின் நம்பிக்கை இது

கொழும்பு ஆகஸ்ட் 4

இந்திய அமைதிப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உள்ள தகராறு விரைவில் முடிந்துவிடும். வடக்கு, கிழக்கில் அமைதியை இந்திய இராணுவத்தினர் வெகுவிரைவில் நிலைநாட்டி விடுவார்கள் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு.

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவித்தார்

இந்திய செய்தி நிறுவனமான பி. ரி. ஐ. க்கு அளித்த விசேட பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டார்.

வடக்கு, கிழக்கில் அமைதியை நிலை நாட்டுவதே இந்திய அமைதிப்படையின் கடமை. அதனை ஈட்டுவதற்கு அவர்கள் பாடுபட்டு வருகிறார்கள்—

அவர் எது முயற்சி விரைவில் வெற்றி அளிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் அவர்களுக்கும் இடையில் நடக்கும் சண்டை தீர்ந்து விரைவில் அமைதியை அவர்கள் நிலைநாட்டுவார்கள் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு—

வடக்கு கிழக்கில் தேர்தலை நடத்தக்கூடிய சூழ்நிலை உருவாகும் என்பதிலும் எனக்கு நம்பிக்கை உண்டு—

வடக்கு கிழக்கில் குடியேற்றம் நடைபெறுவதாக் கூறப்படுவது

(6 ஆம் பக்கம் பார்க்க)

### தமிழ்நாட்டில்

## முகாம்களுக்கு வெளியே தங்கியிருந்த 500 பேர் வெள்ளியன்று வருவர்

சென்னை, ஆக. 4

முகாம்களுக்கு வெளியே தங்கியுள்ள இலங்கைத்தமிழ் அகதிகளில் ஐந்நூறு பேர் நாளை மறுநாள் வெள்ளிக்கிழமை கப்பல் மூலம் இராமேஸ்வரத்தில் இருந்து காங்கேசன் துறைக்குக் கூட்டிச் செல்லப்படுவர் என்று அறிவிக்கப்பட்டது.

இதேவேளை 677 இலங்கைத்தமிழ் அகதிகள் நேற்று தலைமன்னார் போய்ச் சேர்ந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

அவர்களில் 389 பேர் பெரியவர்கள். எஞ்சியோர் சிறுவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## மக்கள் வங்கியின் கடன் வழங்கும் சேவை மீண்டும் வடக்கில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஆக. 4

கடந்த சில வருடங்களாக வடக்கு, கிழக்கு பகுதிகளில் ஸ்தம்பித்திருந்த மக்கள் வங்கியின் கடன் வழங்கும் சேவைதற்பொழுதுமீண்டும் ஆரம்பிக்கப்பட்டு உள்ளது.

முதற் கட்டமாக வவுனியா மாவட்டத்திலேயே இந்தக் கடன் பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

இந்தத் தகவலை மக்கள் வங்கியின் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

கடந்த கால அசம்பாவிதங்களை அடுத்துகடன் வழங்கும் சந்தர்ப்பங்களில் கடன் பெறுபவர்களினால் சமர்ப்பிக்கப்படும் பிணைகளை ஏற்றுக்கொள்வதில் உள்ள சிக்கலான நிலைமையை அடுத்து மக்கள் வங்கியினால் விவசாய மற்றும் உற்பத்திக் கடன்களை வழங்குவதில் மந்த நிலை இருந்து வந்தது.

ஆனால் தற்பொழுது வவுனியா மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு கிணறு வெட்டுவதற்காக 30 ஆயிரம் ரூபா வரையான கடனுதவியை வழங்க தலைமைப்பீடம் அனுமதியளித்துள்ளது.

இந்தக் கடனுக்கு வழ

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ ஆட்சி பர்மா நாட்டில்!

ரங்கூன், ஆக 4

பர்மாவில் நேற்று இராணுவ ஆட்சி பிறப்பிக்கப்பட்டது.

பர்மா வானொலியில் வழமையான நிகழ்ச்சிகள் நிறுத்தப்பட்டு. இது பற்றி அறிவிக்கப்பட்டது.

இராணுவ ஆட்சியின் நோக்கம் பற்றி பின்னர் அறிவிக்கப்படும் என்று பர்மா வானொலி தெரிவித்தது.

ஆட்சியை எதிர்த்து நாடுமுழுவதும் போராட்டம் ஒன்றை இவ்வாரம் நடத்தப்போவதாக மாணவர் முன்னணி எச்சரிக்கை விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் தான் அரசுத் தலைவரான ஜெனரல் நீவின் பதவியில் இருந்து விலகினார். அவருக்குப் பதில் கடும் போக்காளர் ஒருவர் அரசுத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

பர்மாவில் ஒரு கட்சி அரசமைப்பு இருந்து வருகின்றது. (ஒ-எ)

## ஆசிரிய கலாசாலை இறுதிப் பரீட்சை 22 ஆம் திகதி கோப்பாயில்

யாழ்ப்பாணம், ஆக 4

பலாலி, கோப்பாய் ஆசிரிய கலாசாலை கடந்த வருடம் நடைபெற வேண்டிய இறுதிப் பரீட்சை எதிர்வரும் 22 ஆம் திகதி கோப்பாய் ஆசிரியர் கலாசாலை, கோப்பாய் மகா வித்தியாலய மண்டபங்களில் நடைபெறும்.

கடந்த டிசம்பர் மாதம் நடைபெறவிருந்த பரீட்சை இராணுவ நடவடிக்கை காரணமாகப் பின்போடப்பட்டது. அதைத் தொடர்ந்து கடந்த ஜுலை மாதம் 20 ஆம் திகதி இப் பரீட்சையை கொழும்பில் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதனை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஆட்சேபித்து, பரீட்சையை ஒத்திவைப்பதுடன், கொழும்பில் நடத்தாமல் யாழ்ப்பாணத்தில் நடத்த வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தது.

இப்போது பரீட்சையை இங்கேயே நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

4-8 1988
ஆடி - 20
வியாழக்கிழமை
சுபநேரம்:
07 34 முதல் 09-04வரை
ராகுகாலம்:
01 34 முதல் 03 04வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

### முச்சந்தி முரளி



யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியின் கதையும் அப்ப சமுதை தேய்ந்து கட்டெறும்பான நிலையாய் மாறுது பாத்தியளே...!

## கோணேசர் ஆலயம் பூட்டப்பட்ட நிலையில்

திருகோணமலை கோணேசர் ஆலயத்தில் சென்ற 21 ஆம் திகதிக்குப் பின்பு இதுவரை பூசைகள், திருவிழாக்கள் எதுவும் நடைபெறவில்லை. அன்று பூட்டப்பட்ட ஆலயம் திறக்கப்படவில்லை.

கடந்த மாதம் இருபத்தோராந்தி தி வியாழக்கிழமை இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தை அடுத்து பூசைகள் எதுவும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அன்று ஆலயத்திற்கு வழிபடச் சென்ற துறைமுக அதிகார சபையைச் சேர்ந்த எழுதுவினைஞரான திரு. பி. ஈஸ்வரபாதம் காணமற் போய் விட்டார்.

அவரின் சடலம் கூட இன்றுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. (ஒ-150)

## காணமற் போனவர்கள் கண்டுபிடிப்பு

திருகோணமலை, ஆக 4

திருமலையில் குண்டு வெடித்த தினத்தன்று 4 ஆம் கட்டையில் வைத்து காணமற்போன தம்பலகமத்தைச் சேர்ந்த வி. கிருபானந்தன் (20 வயது), ஐ. கோபிநாத் (5 வயது) ஆகிய இருவரும் 29 ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டனர்.

பதற்றம் காரணமாகத் தப்பிச் சென்று குச்சவெளிப்பக்கம் சென்று பின்னர் ஒருவாறு தம்பலகமத்தை இவர்கள் சென்றடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-150)

## கந்தளாயில் குண்டு வெடிப்பு!

கொழும்பு, ஆக. 4

கந்தளாயில் நேற்றுக் காலை தேநீர்க்கடை ஒன்றில் குண்டு வெடித்ததில் ஒரு சிங்களவர் உயிரிழந்தார்.

படுகாயமடைந்த அறுவரில் ஒருவர் ஸ்ரீலங்கா இராணுவச் சிப்பாய். ஏனையாரில் இருவர் பெண்கள்; மூவர் குழந்தைகள் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

### ஊரடங்கு:

## இரவு -7 காலை -6

யாழ்ப்பாணம், ஆக. 4

யாழ்ப்பாணக் குடாநாட்டில் அமுலில் இருக்கும் ஊரடங்கு நேரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

நேற்றுத் தொடக்கம் ஊரடங்கு நேரம் இரவு ஏழு மணி முதல் காலை

(6 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். ஆஸ்பத்திரி

## வெளிநோயாளர் பிரிவில் 700 பேருக்கு மட்டுமே சிகிச்சை

யாழ்ப்பாணம், ஆக 4

யாழ். ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை அளிக்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

போதிய டாக்டர்கள் இல்லாதிருப்பதன் காரணமாக இந்நிலை ஏற்பட்டுள்ளதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

காலையில் நானூறு நோயாளர்களும் மாலை

(6 ஆம் பக்கம் பார்க்க)

### உதயன் செய்தி ஊர்ஜிதம்:

## மருத்துவ மாணவருக்கு 'கிளினிக்கல்' பயிற்சி 15 ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மருத்துவபீட 1983 ஆம், 1984 ஆம் கல்வி ஆண்டு மாணவர்களுக்கான ''கிளினிக்கல்'' பயிற்சிகள் எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளன.

யாழ். பல்கலைக் கழகத்தில் துணைவேந்தர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் இதனை உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளார்.

மருத்துவபீட மாணவருக்கு'கிளினிக்கல்'பயிற்சி ஆரம்பிக்கப்படலாம் என்ற செய்தி ஏற்கனவே கடந்த செவ்வாய்க்கிழமை உதயனில் வெளியானது தெரிந்ததே.

கடந்த 10 மாதங்களாக மருத்துவபீட மாணவர்களுக்கான விரிவுரைகள் இதுவரை நடைபெறவில்லை விரிவுரையாளர்கள் பற்றாக்குறை தீர்க்கப்பட்ட பின்னரே விரிவுரைகளை

(6 ஆம் பக்கம் பார்க்க)

### திருமலை' கச்சேரியில் கடமைபுரியும்

## தமிழ் ஊழியர்கள் இன்னும் கடமைக்குச் செல்லவில்லை

திருகோணமலை, ஆக 4

கடந்த 21 ஆம் திகதி திருமலையில் குண்டு வெடித்த தினத்தன்று கோட்டையிலுள்ள கச்சேரியில் கடமையாற்றிய தமிழ் அரசாங்க ஊழியர்களை ஆயுதங்களுடன் சென்ற கோஷ்டி ஒன்று தாக்க முற்பட்டதை அடுத்து கச்சேரியில் கடமை புரியும் தமிழ் ஊழியர்கள் எவரும் இன்றுவரை வேலைக்குச் செல்லவில்லை.

இவர்கள் கடந்த முதலாந்திகதி மேலதிக அரசாங்க அதிபர் திரு எஸ் கிருஷ்ணமூர்த்தியின் இல்லத்தில் கூடி ஆராய்ந்தனர். அதனைத் தொடர்ந்து கீழ்க்கண்ட நான்கு கோரிக்கைகளையும் உள்ளடக்கிய மகஜர் ஒன்று தயாரிக்கப்பட்டு அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

★ கோட்டைக்குள்ளும் வெளியேயும் இருக்கும் சிங்கள அகதிகள் அவ்விடங்களிலிருந்து உடனடியாக அகற்றப்பட வேண்டும்.

★ கோட்டைவாசலிலும் உள்ளேயும் வெளியே சர்வோதயச் சந்தியிலும் அமைதிப் படையினர் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### வன்செயல்கள், இனக்கலவரங்கள், இராணுவ நடவடிக்கைகளால்

# பாதிக்கப்பட்டோர் மறுவாழ்வுக்கு 6 அம்சப் புதிய ஒருங்கிணைந்த திட்டம்

## இன்றைய அரச அதிபர் மாநாட்டில் விளக்கப்படும்

—அலுவலகச் செய்தியாளர்: ஜோய் பூரணச்சந்திரன்—

யாழ்ப்பாணம், ஆக 4

1983 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 24 ஆம் திகதி தொடக்கம் இதுவரை இடம்பெற்ற இனக்கலவரங்கள், வன்செயல்கள் இராணுவ நடவடிக்கைகள் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கான புதிய ஒருங்கிணைக்கப்பட்ட ஆறு அம்சத் திட்டமொன்று புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இப்புதிய ஆறு அம்சத் திட்டம்புனர்வாழ்வு புனர்நிர்மாண செயற்பாடுகளுக்கே வகைசெய்கிறது.

இன்று கொழும்பில் நடக்கும் அரசாங்க அதிபர்கள் மாநாட்டில் புதிய திட்டம் குறித்து விரிவாக விளக்கப்படும்.

புதிய ஆறு அம்சத் திட்டம் குறித்து கொள்கை விளக்கக் கைநூல் ஒன்றும் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் திரு. பண்டாரகொடவினால் வெளியிடப்பட்டுள்ளது.

புதிய ஒருங்கிணைக்கப்பட்ட ஆறு அம்ச புனர்வாழ்வு புனர்நிர்மாணத் திட்டம் வருமாறு:-

1. இடம் பெயர்ந்த குடும்பங்கள் பெறக்கூடிய மீள் குடியமர்த்தல் படி.
2. வீடு திருத்தலும், புனரமைத்தல் நன்கொடையும் கடனும்.
3 உற்பத்தி முயற்சிக்கான நன்கொடை.
4. உற்பத்தி முயற்சிக்கான கடன்.
5. இந்தியாவில் இருந்து தாயகம் திரும்புவோருக்கு உரிய உதவி.
6. உயிரிழப்புக்களுக்கும் உடல் ஊனங்களுக்குமான உதவி நிதி.

இத்திட்டத்தினால் பெறக்கூடிய பயன்கள் பின்வருமாறு:-

★ வன்முறைகள் காரணமாக இடம் பெயர்ந்த குடும்பமொன்று மீளக் குடியமர்தலுக்காக நன்கொடைப் பணமாக ரூபா 2 ஆயிரம் வழங்கப்படும்.

★ ஆயிரத்து ஐநூறு ரூபா அல்லது அதற்குக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Honda,-Reconditioned புதிய பழைய Model C-90 MB. 5 Chaly மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்குண்டு. No. 16, கண்டிரோட், யாழ்ப்பாணம். (உதவி அரசாங்க அதிபர் பணிமனை முன்பாக) (5431)

ஒலிவேக்கிங் டீ பிறீசர் (D. Freezer) விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். 102, 3-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம், (5530)

பாவித்த வீட்டுத்தளபாடங்கள் மெத்தைகள், கட்டில், அலுமாரி, Hall Set சாப்பாட்டு மேசை, கண்ணாடி மேசை, விருந்தை கதிரைகள், பிளாஸ்ரிக் கதிரைகள், மேசைகள், பழைய கதவு, நிலைகள் மற்றும் பல மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. M. தியாகராஜன் 326, பிரதான வீதி யாழ்ப்பாணம் (சென்பற்றிக்ஸ் சந்தியருகில்.) (5437)

## FOR SALE

National G1 Color Video, Camera, EN 180 VCR, Focus Light, and other Video Electronic goods. Contact:- ExpoVideo Comptex, No. 7, K. K. S. Road, Kondavil. (5441)

## தேவை

(1) யாழ்மாநகரசபை எல்லைக்குள் வீடு கட்டுவதற்கு உகந்த காணி தேவை. (2) யாழ் கச்சேரிக்கு அண்மையாக சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு தேவை. (3) ஒரு ரக்ரர் (Tractor) லோட் முட்கிளுவை தேவை. தொடர்பு:- J.P.T. Ltd 3, நவீன சந்தை (மேல் மாடி) யாழ்ப்பாணம். (5525)

போட்டோஸ்ரற் பிரதி பண்ணுவதற்கு பெண் உதவியாளர் ஒருவர் தேவை. 7-8-88 (ஞாயிறு) முன்னர் நேரில் சமுகம் தரவும். சன்லைற் றைக்கிளீனேர்ஸ், யாழ்ப்பாணம். (5435)

### அச்சு இயந்திர இயக்குனர் தேவை

அனுபவம் வாய்ந்த பிளேற்றின் அச்சு இயந்திர இயக்குனர் தேவை. நற்சாட்சி பத்திரங்களுடன் நேரில் தொடர்பு கொள்ளவும் முகவரி:- இலக்கம் 15, 2ம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (C-6014)

### மணப் பெண் தேவை

யாழ்/இந்து வேளாளர் குலத்தைச் சேர்ந்த B. Sc பட்டதாரி ஆசிரியருக்கு, 33 வயதிற்குட்பட்ட விஞ்ஞான/கலை பட்டதாரி; கணக்கியல் சுறறு தொழில் புரியும் மணப் பெண் தேவை. விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். தொடர்பு:- 308 C/o உதயன் யாழ்ப்பாணம். (5524)

### டிலிவரி பையன்கள் தேவை

டிலிவரி (Delivery) பையன்கள் தேவை. வயது 12 - 15 இடைப்பட்டவர்கள் தகுந்த அத்தாட்சிப்பத்திரங்களுடன் 05-08-88 காலை 9 மணி - 10 மணிக்கு இடையில் நேரில் வரவும். மெடிக்கல் ஹோல் டிஸ்பென்சரி, இல. 224, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். C/6008

### சாரதி வேலை தேவை

எல்லாவித வாகனமும் செலுத்தத் தெரிந்த நன்கு அனுபவமுள்ளவர் (சகல நற்சான்றுப் பத்திரங்களும் வைத்திருப்பவருக்கு) எந்தவித வாகனமும் செலுத்தும் உள்ளூர் சாரதியாக வேலை செய்ய விரும்புகிறார். விபரங்களுக்கு தொடர்பு கொள்க. எஸ். ரி. அந்தோனிப்பிள்ளை, மே/பா. என். சரவணமுத்து, மானிப்பாய் மேற்கு, மானிப்பாய். (5521)

### ஆசிரியர் தேவையா?

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் 7 ம், 8 ம், 9 ம் ஆண்டு மாணவர்களுக்கு கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களும் 10 ம், 11 ம் ஆண்டு மாணவர்களுக்கு விஞ்ஞான பாடம் புதிய பாடத்திட்டத்திற்கமைய தகுதி வாய்ந்த ஆசிரியரினால் வீட்டுக்கு வந்து அல்லது கல்வி நிறுவனத்திற்கு வந்து கற்பிக்கப்படும். 15. 08. 88 இற்கு முன் தொடர்பு கொள்ளவும். இல 309, C/o உதயன், யாழ்ப்பாணம். (5529)

### தவறிவிட்டது

கந்தையா தயாபரன் ஆகிய எனது அடையாள அட்டை இல. 651401615 V திருநெல்வேலி சந்திக்கும் நல்லூர் கோயில் வீதிக்கும் இடையில் 2-8-88இல்தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (5440)

கிரிசியன் அமலதாசன் என்பவர் தனது அடையாள அட்டையை இல 673531369 V 3-8-88 அன்று குருநகரிற்கும் நாவாந்துறைக்கும் இடையில் தவற விட்டு விட்டார். கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (5528)

### காணவில்லை

பரமானந்தம் (குமார்) வயது 13 என்பவரை 28 ஆம் திகதியில் இருந்து காணவில்லை. உயரம் 4' கறுத்த மெல்லிய உடலமைப்பைக் கொண்டவர். இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் S. கண்ணன், வீரகாளியம்மன் கோவிலடியில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். நன்றி. (5520)

## கல்வி

### A/L 89 இரசாயனம்

108, Brown Road ஆசிரியர் சத்தீஸ் "வளங்கள்" ஆரம்பம் 4-8-88 வியாழன் 4P.m (5527)

COMPUTERIZED PROCESSING
& PRINTING A 135 COLOUR ROLL
P.C PRINTS - 4-00
PROCESSING
Free 8x10
COLOMBO Studio, Jaffna

# திருமலையில் தேடுதல் நடவடிக்கை தீவிரம்

திருகோணமலை, ஆக 4

திருமலை நகரில் இந்தியப் படையினரின் தேடுதல்களும், ரோந்து நடவடிக்கைகளும் தற்போது தீவிரப்படுத்தப் பட்டுள்ளன.

சந்திக்குச் சந்தி சோதனைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

அடையாள கார்ட்டுகளைப் பரிசோதித்து சந்தேகமானவர்களை அவ்விடத்திலேயே இருக்க வைக்கப்படுகின்றனர்.

வாகனங்கள் கூட பலத்த சோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றன.

மட்டிக்கழிச் சந்தியில் வைத்து உள்ளே வரும் வெளியே போகும் வாகனங்கள் யாவும் சோதனையிடப்படுகின்றன.

பிரயாணிகள் இறக்கப்பட்டு அடையாள கார்ட்டுகள் சோதனையிடப்படுகின்றன. (இ-150)

# சொறி-சிரங்கு மருந்து: 3 நிறுவனங்கள் இணைந்து இலவசமாக விநியோகம்

மானிப்பாய், ஆக. 4

சொறி, சிரங்கு போன்ற நோய்கள் பரவாமல் தடுப்பதற்கான மருந்து வகைகளை போரூட், றெட்பானா, சர்வோதயம் போன்ற நிறுவனங்கள் இணைந்து இலவசமாக வழங்கி வருகின்றன.

இந்நிறுவனங்களைச் சேர்ந்த சுகாதார சேவைப் பகுதியினர் நவாலி அட்டகிரி சைவ வித்தியாலய மாணவர்கள் அத்தனை பேருக்கும் சிரங்கு நோய்த்தடை பூச்சி மருந்து வழங்கியதோடு, மீண்டும் அந்நோய் வராமல் பாதுகாப்பதற்காக ஒவ்வொரு மாணவருக்கும் வில்லைகளையும் வழங்கினர்.

ஏழைகளை பாதுகாப்பதில் மேற்படி நிறுவனங்கள் ஆற்றிவரும் சேவைகளை பாடசாலை அதிபர் திரு. இ. வல்லிபுரம் நன்றியுடன் பாராட்டினார். (இ-90)

## மகஜர்

கோப்பாய், ஆக 4

யாழ்ப்பாணம் - வாதரவத்தை பஸ்சேவையை நடத்துமாறு வடபிராந்திய முகாமையாளரை இப்பகுதி மக்கள் மகஜர் மூலம் கேட்டுள்ளனர். (இ-72)

## ஞானசம்பந்தர் கலை மன்றம் இலவசப் பயிற்சி

பருத்தித்துறை, ஆக. 4

பாடசாலையை விட்டு விலகி வேலையற்று இருக்கும் வடமராட்சிப் பகுதி இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்புப் பெறும் வகையில் இலவச சுருக்கெழுத்து, தட்டச்சு பயிற்சி வகுப்புகளைப் பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலைமன்றம் நடத்தவுள்ளது.

ஜீ. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சையில் தமிழ், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி அடைந்தவர்கள் தமிழ் மொழிமூலம் சுருக்கெழுத்து - தட்டச்சுப் பயில முடியும்.

ஆங்கில மொழிமூலம் பயில விரும்புபவர்கள் ஜீ. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதி இம்மாதம் 19ஆம் திகதி என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (இ-118)

## நாவாந்துறை சென். மேரிஸ் ஏற்பாடு

குருநகர், ஆக. 4

எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெற இருக்கும் புனித - பரலோக மாதா ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு கட்டுரை, பேச்சு, சமய அறிவு, பொது அறிவு, விளையாட்டுப் போட்டிகளை நடத்த நாவாந்துறை சென். மேரிஸ் சனசமூக நிலையம் ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

விளையாட்டுப் போட்டிகள் 15 வயதுக்கு உட்பட்டவர்களுக்கும், கட்டுரை, பேச்சு, சமய, பொதுஅறிவுப் போட்டிகள் 18 வயதுக்கு உட்பட்டவர்களுக்கும் நடைபெறும்.

திருநாளை ஒட்டி உள்ளூர் விளையாட்டு வீரர்களுக்கு இடையேயான 7பேர்கள் கொண்ட விலகல் முறை உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியும் நடைபெறும். (இ-51)

**இசைத்தட்டுகள் உடன் விற்பனைக்கு**

* தம்பி தங்கச்சி
* பாட்டி சொல்லைத் தட்டாதே
* ஜீவா
* இது நம்ம ஆளு
* கிராமத்து கிளி
* மேளம் கொட்டி தாலி கட்டு

தொடர்பு:
ALPHA TEKNO
72, சச்சேரியடி,
யாழ்ப்பாணம். (5444)

**எமது நேற்றைய புதிய வெளியீடு**

பிரபு - சத்யராஜ்
நளினி - செந்தில்
நடித்த
**"அஞ்சாத சிங்கம்"**
(ஒரிஜினல்)
குணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (C. 6026)

மணிக்குரல் ட்ரவல்ஸ்

**மணிக்குரல் வைசின் தர்மலிங்கம்**
துரித கெதியில் ஒழுங்கு செய்யும் உடனடிப்
**பிரயாண ஒழுங்குகள்**
★ சவூதி அரேபியா
★ குவைத்

சவூதி அரேபியாவிற்கு
Open Visa வில் 10-8-88ல் பிரயாணம் செய்வதற்கு எம்மிடம் Saudi யில் உள்ள பிரபலமான
**Electrical & Electronic Company**
Cleaners (கிளீனேர்ஸ்) வேலைக்கு வெற்றிடங்கள் உள்ளன.
விரும்புவோர் 5ஆம் திகதிக்கு முன்பு நேரில் வரவும்.
வயது 25க்கு மேல் சம்பளம் 450 SR

| | | |
|---|---|---|
| PLUMBERS | 650 SR+150 SR | |
| CAR PAINTERS & TINK RS | 1000SR | உணவு இருப்பிடவசதியுடன் |
| ARTIST | 600 SR | ,, ,, |
| DRIVERS | 600 SR | ,, ,, |
| MASON | 650 SR | ,, ,, |
| ELECTRICIAN | 600 SR | ,, ,, |

மற்றும் 21 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 3 வாரங்களில் பிரயாணம் செய்ய பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.

SCHOOL CLEANERS, SIYAMCO HARBOUR CLEA::ERS
ALKOTHARY COMPANY CLEANERS

| | |
|---|---|
| SCAMEL DRIVERS | 1000 SR |
| HOUSE BOYS | 500 SR |
| COOKS | 600 SR |

**KUWAIT**

| | | |
|---|---|---|
| (1) | ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ் (ஆண்கள்) | —35 KD |
| (2) | ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ் (பெண்கள்) | —35 KD |
| (3) | மேசன் | —50 KD |
| (4) | தச்சுவேலையாள் | —50 KD |
| (5) | எலெக்ரீசியன்ஸ் | —60 KD |
| (6) | வாகன-மெக்கானிக் | —60 KD |
| (7) | பிளம்பர்ஸ் | —60 KD |
| (8) | வாகன - எலெக்ரீசியன்ஸ் | —60 KD |
| (9) | சாரதிகள் | —60 KD |

பாஸ்போட் 6 படங்களுடன்
நேரில் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-
**மணிக்குரலின் வைசின் தர்மலிங்கம்**
அமுத மஹால்
நியூ ரேட், ஏழாலை வடக்கு,
ஏழாலை. (5589)

**CONSTRUCTION & DEVELOPMENT COMPANY LTD.**
37, S. D. Jayasinghe Mawatte,
NUGEGODA.

**வெளிநாட்டு வேலைவாய்ப்பு**
**குவைத்**

விவசாயப் பண்ணையில் வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை.
கொழும்பு முகவரினால், நேரடியாக இங்கு நேர்முகப் பரீட்சை நடத்தப்படும்.
3 போட்டோப் பிரதிகளுடன் தகுதியானவர்கள் கீழ்வரும் முகவரிக்கு கடைசிநாளாகிய
**இன்று - 04-08-88 ஆம் திகதி**
மாலைவரை நேரடியாகச் சமுகம் அளிக்கும்படி வேண்டப்படுகிறீர்கள்.
சம்பளம்: 37 K.D. (1 K.D.—ரூபா 112)
ஒப்பந்தம்: 2 வருடங்கள்.
பிரயாண ஒழுங்குகள் இரு வாரங்களில் மேற்கொள்ளப்படலாம். பிரயாணக் கட்டணம் விசாவின் பின் அறவிடப்படும்.
தொடர்பு விலாசம்:-
No. 9, 3ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். (5585)

## ஈராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 4-10-1920

★

மறைவு 28-7-1986

திதி: 4-8-1988

**திரு. முதலித்தம்பி செல்லத்துரை**

ஆண்டு இரண்டு கழிந்தாலும் உங்கள் நினைவு எங்கள் இதயங்களில் என்றும் நிலைத்து நிற்கும். தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்,

மனைவி, பிள்ளைகள்.

58, கேசாவில் பிள்ளையார் வீதி, வண்ணை வடமேற்கு யாழ்ப்பாணம். (5583)

## இறைவனடி சேர்ந்த முதற் திங்கள் நினைவு தினம்



**அந்திரேசுப்பிள்ளை சின்னப்பு**

மண்ணில் 04. 06. 1902 — விண்ணில் 05. 07. 1988

அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டும் அனுதாபச் செய்திகளை அனுப்பி வைத்தவர்களுக்கும் எமது நன்றிகள்.

எம்மைவிட்டு பிரிந்தாலும் என்றும் நினைவுடன்

பிள்ளைகள், மருமக்கள் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.

40, புதுவீதி, 1ம் ஒழுங்கை, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (5586)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாவது ★பிறந்ததின வாழ்த்து★



**செல்வி சிவலிங்கம் முருகதர்ஜினி**

(முருகன் ஆபரண மஹால் சுன்னாகம்)

யாழ்ப்பாணம் 192 கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த சிவலிங்கம் நிர்மலா தம்பதிகளின் செல்வப் புதல்வி முருகதர்ஜினி இன்று (4-8-88) தனது முதலாவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் முருகன் அருளால் மிக விமரிசையாக கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பாமார்கள், பெரியம்மாமார்கள், சித்தப்பாமார்கள், சித்திமார்கள், மாமாமார்கள், அத்தைமார்கள், அண்ணன்மார்கள், அக்காமார்கள், அத்தான்மார்கள், மச்சாள்மார்கள் மற்றும் உற்றார் உறவினர்கள் யாவரும் தேவியின் திருவருளுடன் சீரும் சிறப்புடன் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

(5439)

# கைதடி முதியோர் இல்லத்துக்கு மருத்துவ சேவை வழங்க முடியாது

## சமூக சேவைத் திணைக்களம் கைவிரிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 4

தற்போதைய குழப்பமான சூழ்நிலைகளால் கைதடி முதியோர் இல்லத்தில் வசிப்போருக்கு எம்மால் மருத்துவ சேவைகளை வழங்க முடியவில்லை. எனவே அங்கு சேவையாற்ற ஒரு மருத்துவரை நியமிக்கவும்.

சமூக சேவைகள் திணைக்கள இயக்குநர் திரு. டி. டி. ஜே. விஜயசுந்தர யாழ் செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் டாக்டர் ஆர். தெய்வேந்திரனுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேற்படி வேண்டுகோளை விடுத்துள்ளார்.

கைதடி முதியோர் இல்லத்தில் வசிப்பவருக்கான தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய பொறுப்பு சமூக சேவைகள் திணைக்களத்தையே சாரும்.

தற்போதைய சூழ்நிலையைக் காரணம் காட்டி சமூக சேவைகள் திணைக்களம் மருத்துவ சேவைகளை வழங்குவதில் இருந்து விலகியுள்ளது.

திரு. விஜயசுந்தர அனுப்பியுள்ள கடிதத்தில் மருத்துவர் ஒருவரை நியமிக்கும்படியும் மருந்து வகைகளை விநியோகிக்கும்படியும், அம்புலன்ஸ் சேவைகளை ஏற்படுத்தித் தரும்படியும் யாழ் செஞ்சிலுவைச் சங்கத் தலைவரைக் கேட்டுள்ளார். (இ-5)

### றெட்பாஹு நிறைவு விழா

யாழ்ப்பாணம் ஆக- 4

றெட்பாஹு ஸ்தாபனம் தனது 14 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் தேசிய விழா இன்று 4 ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகிறது.

இவ் விழா 7ம் திகதி வரை நடைபெறும்.

பொது மக்களுக்கு றெட்பாஹு செய்யும் வேலைகளைப்பற்றிஅறியத் தருவதும், எதிர்வரும் ஆண்டுகளில் றெட்பாஹு செய்ய இருக்கும் அபிவிருத்தி முயற்சிகளைப் பற்றி சிறந்த முறையில் எடுத்துக்காட்டுவதும் இந்த விழாவின் பிரதான நோக்கமாகும்.

(இ)

### மொட்டை அடிக்கப்பட்டு ஆலய முன்றலில் நிறுத்தப்பட்ட இருவர்

மட்டக்களப்பு, ஆக.4

மட்டக்களப்பு சண்டேசுவரர் சந்நிதானத்திலுள்ள உண்டியலைத் திருட முயன்ற இரு இளைஞர்கள் மொட்டை அடிக்கப்பட்டு பூசைநேரம் ஆலயமுன்றலில் நிறுத்தப்பட்டனர்.

இச்சம்பவம் அண்மையில் மட்டக்களப்பு ஆனைப்பந்தி பிள்ளையார் ஆலயத்தில்நடைபெற்றது.

சம்பவம் தொடர்பாக கூறப்படுவதாவது;

ஆலய சுற்றுடல் பகுதியில் வாழும் இரு இளைஞர்கள் சம்பவதினமிரவு 7.30 மணிஅளவில் உண்டியலை எடுத்துக்கொண்டு வெளியே வர முயன்றனர்.

சில இளைஞர்கள் இதனைக் கண்டு விடவே உண்டியலை வீசிவிட்டு அவர்கள் இருவரும் ஓட்டம் பிடித்தனராம்.

அவர்களில் ஒருவர் தீவிரவாத குழு ஒன்றில் இருந்தவர் என்று பின்பு தெரிய வந்தது.

உடனே அக்குழுவிடம் இளைஞர்கள்தகவல் கொடுக்கவே குழுவினர் தேடுதல் மேற்கொண்டனர்.

குழுவினர் தேடிச் சென்றபோது வைத்தியசாலை வாட் ஒன்றில் படுத்திருந்த போது இருவரும் பிடிக்கப்பட்டனர்.

கஞ்சா மயக்கம் தெரியாமல் செய்ததாக குற்றத்தை இருவரும் ஒப்புக் கொண்டனராம்.

மறுநாள் காலை "நாங்கள் தான் உண்டியல் திருடர்கள்" என்ற சுலோக அட்டையுடன் மொட்டையடிக்கப்பட்டு ஆலய முன்றலில் இருவரும் நிறுத்தப்பட்டனர்.

(இ-21)

### சரத் சந்திராவுக்கு மகஸேஸே விருது

கொழும்பு, ஆக 4

பிரபல சிங்கள நாவலாசிரியரான பேராசிரியர் எதிரவீர சரத் சந்திராவுக்குபிலிப்பைன்ஸின் மகஸேஸே விருது வழங்கப்படுகிறது.

இலக்கியத்துறை வளர்ச்சிக்கு பணிபுரிந்ததற்காக அவருக்கு இவ் விருது வழங்கப்படுவதாக அறிவிக்கப்படுகிறது.

மகஸேஸே விருதைப் பெறும் இரண்டாவது இலங்கையர் இவராவர்.

சர்வோதய இயக்கத் தலைவர் ஏ. ரி. ஆரியரத்ன இவ்விருதைப் பெற்ற முதல் இலங்கையர் ஆவார். (ஒ-எ)

## தடையை மீறிய மீனவர் தண்டனை பெற்றனர்

வடமராட்சி, ஆக 4

இன்பருட்டிப் பகுதியில் தடையை மீறி மீன் பிடிக்கச் சென்றவர்கள் இந்திய கடற்படையினரால் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர் என்று கூறப்படுகிறது.

படையினர் தண்டனை கொடுத்ததுடன் எச்சரித்தும் கரைக்குத் திருப்பி அனுப்பினார்கள்.

கடந்த செவ்வாய்க் கிழமை இச்சம்பவம் நடந்தது.

(இ-160)

### ஊரடங்கு வேளையில் திருட்டு

திங்கள் இரவுஊரடங்கு வேளையில் பருத்தித்துறையில் யாழ் பிரதான வீதியில் உள்ள கடை ஒன்றில் பெறுமதி வாய்ந்த ரேப் ரெக்கோடர்களும் ரெக்கோடிங்குக்குப் பயன்படுத்தப்படும் பொருள்களும் திருடப்பட்டன,

(இ-160)

## வறுத்தலை விளானில் 6 வீடுகளில் கொள்ளை

காங்கேசன்துறை, ஆக.4

ஊரடங்கு அமுலில் இருந்த சமயம்வறுத்தலை விளானில் துப்பாக்கி முனையில் ஆறு வீடுகளில் துணிகரக் கொள்ளைகள் இடம்பெற்றுள்ளன.

கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு ஏழுமணி முதல் பத்து மணிக்கிடையில் இடம்பெற்ற இத்துணிகரக் கொள்ளைச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:—

வறுத்தலை விளானைச் சேர்ந்த மாசிலாமணி என்பவர் வீட்டுக்குள் நுழைந்த துப்பாக்கி ஏந்திய இனந்தெரியாதவர்கள் அங்கிருந்தவர்களை ஓர் அறையில் தடுத்து வைத்துக் கொள்ளையடித்தனர்.

பின் அவரது வீட்டுக்கு அயலில் உள்ள அவரது உறவினர்களின் வீடுகளுக்கும் சென்று அங்கும் கொள்ளையிட்டனர்.

இச்சம்பவத்தில் பல லட்சம் ரூபா பெறுமதியான தாலிக்கொடி, சங்கிலிகள், காப்புகள், ரொக்கப்பணம் ஆகியன கொள்ளையிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வீடுகளைத் துருவித் துருவி ஆராய்ந்து வீட்டுப் பொருள்கள் சேதமாக்கப்பட்டதாகவும், ஆண்பெண் என்று இல்லாமல் தாம் தாக்கப்பட்டதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் உதயனுக்குத் தெரிவித்தனர்.

இக்கொள்ளைச் சம்பவங்கள் இப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

(ஒ-68)

## ரூ. 2 ஆயிரம் பெறுவதற்கு தொடரும் விண்ணப்பங்கள்

யாழ்ப்பாணம், ஆக. 4

அக்டோபர் இராணுவ நடவடிக்கைகளின் போது இறந்தவர்களில் தங்கி இருப்போருக்கு வழங்கப்பட்ட 2 ஆயிரம் ரூபாவைப் பெறுவதற்கும் தற்பொழுது விண்ணப்பங்கள் வந்த வண்ணம் இருக்கின்றன.

இத்தகவலை யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்-

இதுவரை சுமார் 2500 க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் எமக்குக் கிடைத்துள்ளன.

ஆனால் சுமார் 1,500 பேருக்கு மட்டுமே இத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிவாரணப் பணம் வழங்கப்படுவது தற்பொழுது நிறுத்தப்பட்டிருந்தாலும் கூடத் தொடர்ச்சியாக விண்ணப்பங்கள் கிடைத்த வண்ணமுள்ளதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

(ஒ-5)

### ஜீவசக்தி வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம் ஆக- 4

சமூக அறிவியல் ஏடான 'ஜீவசக்தி' வெளியீட்டு விழா நாளை 5 ஆம் திகதி வெள்ளிக் கிழமை யாழ் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்

கலாநிதி சபாஜெயராசா தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் நூலை வெளியிட்டு உரை நிகழ்த்துவார்.

தமிழ்த்துறை உதவி விரிவுரையாளர் திரு. க. நாகேஸ்வரன் வரவேற்புரை நிகழ்த்துவார். கலைப்பீடாதிபதி பேராசிரியர் ந. பாலகிருஷ்ணன் ஆசியுரை வழங்குவார்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி பேராசிரியர் அ. சண்முகதாஸ், மகாஜனக் கல்லூரி ஆசிரியை திருமதி கோகிலா மகேந்திரன், யாழ் இலக்கிய வட்டத் தலைவர் செம்பியன் செல்வன், அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ.ஜெயராஜ் ஆகியோர் கருத்துரை வழங்குவார்கள்.

ஜீவசக்தி ஆசிரியர் திரு. சி சிவதாஸ் நன்றியுரை வழங்குவார்.

(இ-5)

## துர்க்கை அம்மன் உற்சவ கால ஏற்பாடுகள்

காங்கேசன்துறை ஆக 4

பிரசித்தி பெற்ற தெல்லிப்பளை துர்க்கை அம்மன் தேவஸ்தான வருடாந்த உற்சவம் இம் மாதம் 15ஆம் திகதி ஆரம்பமாவதையொட்டி, உற்சவகால ஏற்பாடுகள் பற்றி ஆராய விசேட கூட்டம் கூட்டப்பட்டது.

ஆலய மண்டபத்தில் வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. வை. இராசையா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பல்தரப்பட்டவர்களும் கலந்து கொண்டனர்.

வழமைபோல் உற்சவ காலங்களில் போக்குவரத்து, சுகாதார மற்றும் சேவைகளை மேற்கொள்வதென முடிவு செய்யப்பட்டது.

சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இறுதியில் நன்றி கூறினார். (இ-68)

## சிவில் நிர்வாகத் தடை

மட்டக்களப்பு மாவட்டத்தில் 3 வாரநாட்கள் தளர்த்தப்பட்டிருந்த சிவில் நிர்வாகத் தடையை தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் நடைமுறைக்குகொண்டு வந்துள்ளனர்-

சிவில் நிர்வாகத்தடை அமுலில் இருக்கும் நாட்களில் பொலிஸார் உட்பட எவராவது தடையை மீறினால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.


### 1. DUBAI

ஒடருக்கு பாஸ்போட் தந்தவர்கள் எல்லோரும் எதிர்வரும் 20, 21 ஆந் திகதிகளில் சந்திக்குமாறு வேண்டப்படுகிறார்கள்.

### 2. KUWAIT

ஒடருக்கு பாஸ்போட் தந்தவர்கள் எல்லோரும் எதிர்வரும் 9, 10 ஆந் திகதிகளில் சந்திக்குமாறு வேண்டப்படுகிறார்கள்.

**வேலைவாய்ப்புகள்**

### 3. KUWAIT

| | | |
|---|---|---|
| (1) | ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ் (ஆண்கள்) | — 35 KD |
| (2) | ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ் (பெண்கள்) | — 35 KD |
| (3) | மேசன் | — 50 KD |
| (4) | தச்சுவேலையாள் | — 50 KD |
| (5) | எலெக்ரீசியன்ஸ் | — 60 KD |
| (6) | வாகன-மெக்கானிக் | — 60 KD |
| (7) | பிளம்பர்ஸ் | — 60 KD |
| (8) | வாகன-எலெக்ரீசியன்ஸ் | — 60 KD |
| (9) | சாரதிகள் | — 60 KD |

இரண்டு வருட ஒப்பந்தம், இலவச உணவு, வைத்திய இருப்பிட வசதிகள்.

**சவூதி அரேபியா**

(1) வீதி துப்புரவாக்கிகள் — 300SR - 100SR

3 வருட ஒப்பந்தம்

இரண்டு கிழமையுள் பயண ஒழுங்குகள் செய்யப்படும்:

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**A. தவச்செல்வம் B. Sc. (Hons)**

நெல்லியான் வீதி,

சுழிபுரம்.

(C-6002)


### நெடுந்தீவு - குறிகாட்டுவான்

## வள்ளம் பழுதடைவதால் மக்கள் படும் அவலம்

யாழ்ப்பாணம், ஆக 4

நெடுந்தீவு-குறிகாட்டுவான் இடையேயான கடல் போக்குவரத்தில் ஈடுபடும் வள்ளங்கள் சில வேளைகளில் நடுக் கடலில் பழுதடைந்து விடுவதனால் அதில் பயணம் செய்யும் பொது மக்கள் பெரும் ஆபத்துக்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

இவ்வாறு நெடுந்தீவு பிரசைகள் குழு தலைவர் உதயனுக்குக் கவலைதெரிவித்தார்.

பிரஸ்தாபகடல்பாதையில் சேவையாற்றும் அரசாங்க படகுகள் பழுதடைந்து விட்டதனால் தற்பொழுது தனியார் வள்ளங்களே இங்கு சேவையாற்றி வருகின்றன.

இந்த வள்ளங்கள் அடிக்கடி நடுக்கடலில் பழுதடைந்து விடுகின்றன. இதனால் கொந்தளிக்கும் கடலில் பயணிகள் பெரும் ஆபத்துக்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

இந்த வாரத்தில் மட்டும் நான்கு முறை இந்த வள்ளங்கள் நடுக் கடலில் பழுதடைந்து மக்கள் பெரும் அவஸ்தைப்பட வேண்டியதாயிற்று.

மேலும் இந்தப் பயணிகள் வள்ளங்களில் பயணிகளுடன், கருவாட்டுச் சிப்பங்கள், ஆடு மாடு என்பனவும் ஏற்றிச் செல்லப்படுகின்றன. அதனாலும் பயணிகள் பெரும் அவலங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

இது விடயத்தில் ஸ்ரீ லங்கா கடற்படையினர் பலமுறை எச்சரித்தும் பலனேதும் கிடைக்கவில்லையாம்.

இதேவேளை கடந்த முதலாம் திகதியன்று கடலில் பழுதடைந்த வள்ளம் ஒன்றை ஸ்ரீ லங்கா கடற்படையினர் கரை சேர்க்க உதவினர் என்றும் அறிவிக்கப்பட்டது. கடற்பயணத்தில் உள்ள கஷ்டநிலைகுறித்து அரசாங்க அதிபரைச் சந்தித்து முறையிடவுள்ளதாக பிரசைகள் குழுத் தலைவர் தெரிவித்தார்.

[ஒ-9]


A/L

கணக்கியல்

1989 - 90

சனி – ஞாயிறு

1.00 p.m.

ஸ்ரீ

அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்

ஸ்ரான்லி றேட்,

யாழ்ப்பாணம்.

(மக்கள் வங்கி அருகு)

(C 5997)



பிரத்தியேக வகுப்புகள்

A/L

கணக்கியல்

1989 - 90

சனி – ஞாயிறு

4.00 p.m.

ஸ்ரீகாந்தன்


ROYAL INSTITUTE

MANIPAY.

(C 5998)



**புரோட்டீன் நிறைந்த புரோட்டீனெக்ஸ்® பக்கெட் ஒன்றை இன்றே வாங்குங்கள்!**




Grant BJK&E PFL 1158

புரோட்டீனெக்ஸ்® 56% தாவர புரோட்டீனும், உடலுக்கும் ஆற்றலுக்கும் அவசியமான விற்றமின்களும் தாதுப்-பொருட்களும் அடங்கியது.

புரோட்டீனெக்ஸ்®
நீங்கள் நாளாந்தம் இழக்கும் சக்தியை மீட்டுத் தருகிறது.

சில்லறை விலை ரூபா 68/55 125 கிறும்

Pfizer

®ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

புனர்வாழ்வு முகாமிலிருந்து

# இனிமேல் எவரும் விடுதலை செய்யப்படமாட்டார்களாம்

மட்டக்களப்பு ஆக, 4
இந்திய அமைதிப் படையின் புனர்வாழ்வு (சிறைச்சாலை) முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர்கள் இனி விடுதலை செய்யப்பட மாட்டார்கள்.

இதற்கான தடை உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளதாக முகாம் பொறுப்பதிகாரி மேஜர் பாலேஸ்வரநாத் அறிவித்துள்ளார்.

மட்டக்களப்பு பிரஜைகள் குழு, தொழிற் சங்க சம்மேளனம் ஆகியவற்றிற்கு மேஜர் பாலேஸ்வரநாத்தின் அறிவித்தல் அனுப்பப் பட்டுள்ளது.

மேற்படி முகாமில் தான் விடுதலைப்புலிகள் என சந்தேகிக்கப்படுபவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(இ-21)

## அன்பளிப்பு

வடமராட்சி, ஆக 4
கரணவாய் மூத்தவிநாயகர் ஆலயத்துக்கு பெறுமதிவாய்ந்த சுவர்மணிக்கூடு ஒன்றும் மின்விளக்குகளும் வல்வெட்டித் துறையைச் சேர்ந்த குடும்பம் ஒன்றினால் அன்பளிப்புச் செய்யப் பட்டன.

(இ-160)

## ஆரம்பக் கல்வியே சிறுவருக்கு அத்திவாரம்
### ஆண்டு நிறைவு விழாவில் உரை

குருநகர் ஆக. 4
"ஆரம்ப வயதில் ஊட்டப்படுகின்ற கல்வி தான் சிறுவர்களுக்கு அடி அத்திவாரமாக அமைந்து விடுகிறது. அக்கல்வியை விருத்தி செய்ய பெற்றோர் கல்வி பயிற்றுவிக்கும் ஆசிரியைகளுக்கு உதவ வேண்டும்.

ஆனைக்கோட்டை, உயரப்புலம் ஐக்கிய சன சமூக நிலைய அடைக்கல நாயகி பாலர் பாடசாலை பதினைந்தாவது ஆண்டு நிறைவு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய கடற்றொழில் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. த. அந்தோனிப்பிள்ளை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிலையத் தலைவர் திரு. பி. சிமியோன் தலைமையில் விழா நடைபெற்றது.

திரு. த. அந்தோனிப் பிள்ளை தொடர்ந்து பேசியதாவது:-

சிறுவயதில் பெற்றுக் கொண்ட பயிற்சிதான் முதிர்வயதிலும் ஆரோக்கியமான வாழ்வுக்கும், உற்சாகத்திற்கும் துணை நிற்கிறது. தோல்வியைக் கண்டு மனம் சோராமல் வெற்றியை நோக்காகக் கொண்டு முயற்சி எடுப்பதற்கு விளையாட்டுப் போட்டிகள் சிறுவர்களுக்குக் கல்வி சார்ந்த பயிற்சியை வழங்குகின்றன.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

திரு. தே. சிமியோன் பேசுகையில்: "பதினைந்து ஆண்டுகள் என்பது சாமானியமானது அல்ல. ஒரு பருவத்தின் சிறந்த வளர்ச்சி நிலைதான் அது. பல இன்னல்கள், கஷ்டங்கள் மத்தியில் பாலர்களின் ஆரம்பக் கல்வியை இப்பாலர் பாடசாலை மூலம் வளர்க்க முடிந்ததை வெளிச்சம் போட்டுக் காட்டுவதே இவ்விழாவின் பிரதான நோக்கமாகும்." என்றார்.

வைபவத்தை பங்குத் தந்தை வண - பிதா சந்தியாப்பிள்ளை அடிகளார் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

பாலர் பாடசாலை இயக்குநர் திரு. யோ. கீதபொன்கலனின் நன்றியுடன் விழா நிறைவு பெற்றது.

(இ - 51)

## காலியில் இருவர் சுட்டுக் கொலை

கொழும்பு, ஆக 4
காலி நகரில் கடந்த திங்கட்கிழமை இரண்டு ஜே. வி. பி யினரை இராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர் என்று அறிவிக்கப்பட்டது.

கடை ஒன்றைத் திறக்கும்படி உரிமையாளரைக் கட்டாயப்படுத்திக் கொண்டிருந்த ஜே. வி. பி. யினர் மீது பாதுகாப்புப் படை சுட்டது. அப்போதே இந்த 2 பேரும் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

## 35-ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் நீக்கிலான் அருளப்பு

(காலஞ்சென்ற முன்னாள் முறிவு, நெரிவு வைத்தியர் மாதர் அவர்களது மருமகர். பிரபல முறிவு நெரிவு வைத்தியர் மாதர் வைத்திய நிலைய உரிமையாளர்)

உதயம்: 16-09-1936
மறைவு: 1-07-1988

மாதர் எனும் பெயர் மண்ணெம் ஈழத்தில்
மன்னுபுகழ் பெற்றதன்றோ?
பாதகமில் அவர் வழியில் பல்லாண்டுகாலம்
பணி செய்து புகழ்படைத்தீர்!
முறிவு நெரிவு சிகிச்சைக்கு முன்னுளில்
பறங்கித்தெரு மாதர் புகழாகும்!
அறிவிலவர் மருமகன் அருளப்புவும்
ஆற்றிய பணி மிகையாகும்!
நீக்கிலான் அருளப்பு நின்புகழும்
நீங்காது மாதரென்க நிலைக்கும்!
ஆக்கியோன் குடும்பம் மேல்நிலைக்கு
ஆனதால் பரம்பரை நிலைநிற்கும்!
தொண்டுகளில் பலவுண்டு சமூகத்தை
தொன்மைக்கே ஏற்புடைத்தீர்!
அண்டை அயல் கோலங்களை அனுசரித்து
அளித்த கொடை அவற்று ஞறையும்!
தேவமாதா திவ்வியத்து சேர்ந்து நீரே
தேவனருள் பெற்றருளும்!
ஆவலதும் எங்களுடன் என்றென்றும்
அருகிருக்கப் பிறந்தருளும்!

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், உறவினர்.

மாதர் வைத்திய நிலையம்,
45, சென்.பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(C-6007)

## மாணவர்கள் பல்வேறு துறைகளிலும் பூரண அறிவு பெறவேண்டும்

வடமராட்சி. ஆக. 4
இன்றைய மாணவர்களே எதிர்காலத்தில் இந்த நாட்டை ஆளப் போகும் தலைவர்கள். எனவே மாணவர்கள் பல்வேறு துறைகளிலும் பூரண அறிவைப் பெற்று உயர்வடைய வேண்டும்.

அச்சுவேலி இடைக்காடு மகாவித்தியாலய வருடாந்த உயர்வகுப்பு ஒன்று கூடல் நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய பருத்தித்துறை ஆதார வைத்திய சாலை மகப்பேறு வைத்திய நிபுணர் எஸ். குழந்தைவேல் மேற்கண்டவாறு கூறினார்.

வித்தியாலய அதிபர் எஸ். பூபாலசிங்கம் தலைமையில மாணவர்களின் ஒன்றுகூடல் நிகழ்ச்சி நடைபெற்றது.

தொடர்ந்து உரையாற்றிய வைத்திய நிபுணர் "மாணவர்களின் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஆசிரியர்களுக்கு மாத்திரமன்றி பெற்றோர்களுக்கும் முக்கிய பங்குண்டு. எனவே ஆசிரியர்களும் பெற்றோர்களும் இணைந்து செயற்பட்டு மாணவர்களின் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்த வேண்டும்" என்றார்.

மாணவர் தலைவர் எஸ். பவான் விருந்துபசார முடிவில் நன்றியுரை கூறினார்.

(இ-160)

## சுடப்பட்டார்

மட்டக்களப்பு, ஆக 4
தமிழீழ விடுதலைப்புலிகள் தங்கியிருந்த வீடொன்றை முற்றுகையிட்ட மாற்று இயக்க உறுப்பினர்கள் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் மாற்று இயக்க உறுப்பினரொருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் அண்மையில் மட்டக்களப்பு எல்லை வீதியில் நடைபெற்றது.

சம்பவத்தில் கொல்லப்பட்ட நபர் ரவிவர்மன் எனப்படும் ப. ஆனந்தம் (22 வயது) என அடையாளம் காணப்பட்டது.

(இ-21)

## உணவு முத்திரைகள்

காங்கேசன்துறை, ஆக 4
வலி - வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான 64,825 உணவு முத்திரைகள் வந்து சேர்ந்துள்ளன.

வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. வை. இராசையாவின் மேற்பார்வையில் கிராம சேவையாளர்கள் மூலம் இம்மாதம் 10 ஆம் திகதிக்கு முன் உணவு முத்திரைகள் வழங்கப்பட்டு விடும் என்றுநம்பகமாகத் தெரிவிக்கப்படுகிறது.

சென்ற முறை உணவு முத்திரைபெற்றவர்களுக்கு மட்டுமே இம்முறை உணவுமுத்திரை வழங்கப்படும் என்றும் மேலதிக முத்திரைகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கு பின்பே முத்திரை வழங்கப்படும் என்றும் அரச அதிகாரி தெரிவித்தார்.

(இ-68)

## 4 ஆம் ஆண்டு நினைவு தினம்



செல்வி முருகேசு மகேஸ்வரி (கலா)

மலர்வு: 27- 7- 1968
உதிர்வு: 4- 8- 1984

பண்பிற்கோர் இலக்கணமாய்
பாசத்திற்கோர் உறைவிடமாய்
பாரினில் உனைப் பெற்றெடுத்தோம்
காலம் பல இருந்தும்
காலன் உனைப் பறித்தெடுத்தான்
காண்போமோ இனி எங்கு நாம்?

அன்னாரின் நான்காவது ஆண்டு நினைவு தினம் 4-8-88 வியாழக்கிழமை பரவிப்பாஞ்சானிலுள்ள எமது இல்லத்தில் நடைபெறும்.

என்றும் உன்னை நினைத்தேங்கும்:
பெற்றோர், சகோதர, சகோதரிகள்.

திரு. திருமதி முருகேசு
பரவிப்பாஞ்சான்,
கிளிநொச்சி.

(5553)

## நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் ஆங்கிலப் பயிற்சி பெறுவோர் விவரம்

யாழ்ப்பாணம், ஆக. 4
இவ்வருடத்தில் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களுக்கு ஆறு பயிற்சி நிலையங்களில் ஆங்கிலப்பயிற்சி நடைபெற்று வருகிறது.

நான்கு பயிற்சி நிலையங்களில் பயிற்சிபெறும் மாணவர்களின் பெயர்ப் பட்டியல் ஏற்கனவே உதயனில் வெளிவந்துள்ளது.

ஆங்கிலப் பயிற்சி நடைபெறும் மற்றுமொரு நிலையமான நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் பயிற்சிபெற இடம் ஒதுக்கப்பட்ட மாணவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

### பொறியியல் I

1. பி. அகல்யா- பருத்தித்துறை, 2. என். செற்றிக்- வல்வெட்டித் துறை, 3. ஜீ. ஞானநாதம்- கரவெட்டி, 4. பி. கண்ணன்- கரவெட்டி, 5. கே. கேதீசன்- புலோலி, 6. என். சம்பந்தன்- புலோலி. 7. ரி. கிருஸ்ணமோகன்- கரவெட்டி, 8. கே. மணிவண்ணன்- புலோலி, 9. என். முருகானந்தன்- புலோலி, 10. ஜே. நித்தியானந்தன்- கரவெட்டி, 11. ரி. ரமேஸ்- அல்வாய், 12. பி. ரவீந்திரன்- வல்வெட்டித் துறை, 13. எஸ். சிவகுமார்- கரவெட்டி, 14. கே. சிவதாஸன்- கரவெட்டி. 15. ஆர். தயாபரன்- பருத்தித்துறை, 16. ரி. கே. வரதராஜன்- தொண்டமனாறு.

### பொறியியல் II

1. என். உதயகுமார்- கரவெட்டி.

### மருத்துவம்

1. எஸ். சபேசன் - கரவெட்டி, 2. எஸ். தேவகுமார்- பருத்தித்துறை. 3. கே. தவலோகினி - பருத்தித்துறை, 4. எஸ். உஷாகௌரி- கரவெட்டி, 5. [illegible] - பருத்தித்துறை, 6. எஸ். [illegible] 7. ஜே. நிர்மலநாதன் - கரவெட்டி.

### பௌதிகவிஞ்ஞானம்

கே. இளங்கிரன்-உடுப்பிட்டி, 2. ஜே. ரி.ஞானேசன்- பருத்தித்துறை -3. கே. கல்யாணி- புலோலி, 4. ஏ. நடேசரெட்ணசிங்கம் - வல்வெட்டித்துறை, 5. ஏ. நளினகலா - பருத்தித்துறை, 6. கே. ராமச்சந்திரன்- கரவெட்டி, 7. ஜி. சாந்தினி - கரவெட்டி, 8. எஸ். எஸ். சுஜந்தன் - பருத்தித்துறை, 9. கே. சுதாகரன்- கரவெட்டி, 10. கே. பி. பி. வசந்தகுமார்- கரவெட்டி, 11. எஸ். கே. விஜேசுந்தர்- புலோலி, 12. வி.ரி.எஸ். விவேகானந்தா,

### விவசாயம்

1. ஆர். பி.நெடுமாறன்- பருத்தித்துறை,

### கலை,வர்த்தகம்

1. வி. பாலச்சந்திரா- பருத்தித்துறை, 2. ஜி. பாலசுப்பிரமணியம்- பருத்தித்துறை, 3 எஸ். கணபதிப்பிள்ளை - புலோலி, 4.கே.மாலினி- உடுப்பிட்டி, 5. எஸ். நிரஞ்சனு- புலோலி, 6. கே. புஸ்பராணி- புலோலி, 7. கே.சந்தானரெட்னம்- புலோலி, 8. எஸ்.எஸ். சிவாஜினி- கரவெட்டி, 9. எம். சுதர்னகலா- பருத்தித் துறை,

10. வி. வசந்தகுமாரி- புலோலி, 11. என். சந்திரா- புலோலி, 12. எஸ். ஜெயக்குமார்- அல்வாய், 13, பி. கிரிதரன்- கரவெட்டி, 14.பி.ரஜனி - வல்வெட்டித்துறை. 15. பி. பி.செல்வராஜா- பருத்தித்துறை. 16. வி. ஸ்ரீவாணி- வல்வெட்டித் துறை. 17. எஸ். தேவமலர்- உடுப்பிட்டி,

### உயிரியல் விஞ்ஞானம்

எம். அல்வாபிள்ளை- [illegible]துறை, 2. ஆர். கீதமஜலி - பருத்தித் துறை, 3. என். ஜமுனு ஜெயந்தி - வல்வெட்டித் துறை, 4. பி. கணபதிப் பிள்ளை-அல்வாய் 5. ஆர் கௌரிசங்கர் - பருத்தித் துறை, 6. கே. குமுதினி- கரவெட்டி, 7. ஜே. நவரெட்ணசிங்கம் - கரவெட்டி, 8. கே. சாந்தினி- கரவெட்டி, 9. கே. ரி.சிவதீசன்-கரவெட்டி,10.எஸ் திரு மங்கை - புலோலி.

### பல் வைத்தியம்

1. சி. மதியழகன் - பருத்தித்துறை.

### அளவை மதிப்பீடு
[Quantity Surveying]

1. பி. பிரிதிவிராஜ்-பருத்தித்துறை.

### சட்டம்

1. கே. சரோஜாதேவி- வல்வெட்டித்துறை.

(தொடரும்)

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



தோழர்-தேவா
(மங்களநாயகம்)
முல்லைத்தீவு
ஈழமண்ணில்: 6-9-1952



தோழர்-குகன்
(செந்தில்குகன்)
கைதடி
ஈழமண்ணில்: 26-2-1971

ஈழவர் இதயங்களில்: 4-8-1987

உங்கள் உடல்களை
புதைத்தார்களா? எரித்தார்களா?
என்பதை அறியோம் — ஆனல்
உங்களைக் காணும் வாய்ப்பினை
இழந்தோம் என்பது நிச்சயமான போது
குருதி உறைய கண்ணீர் சொரிய
அவர்களின் அந்தரங்கத்தை
அம்பலமாக்க ஆர்ப்பரித்தோம்
மக்கள் விருப்பின்றி எதையும் செய்ய முடியாதென்ற
செய்தியை எழுப்பிய உங்கள் மறைவை
இன்னும் நினைக்கிறோம்
என்றும் எம் நினைவில் நிற்பீர்!

அப்பா, அம்மா, சகோதரர்கள்,
மனைவி, பிள்ளைகள்,
தோழர்கள்.

அப்பா, அம்மா,
சகோதரர்கள்,
தோழர்கள்.

(5425)

## மக்கள் முகம்

ஸ்ரீகணேச வித்தியாலய அபிவிருத்திச் சபை

புங்குடுதீவு ஸ்ரீகணேச மகாவித்தியாலய அபிவிருத்திச்சபையின் வருடாந்தக் கூட்டம் அதிபர் திரு. கா. த. தருமலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

நடப்புவருட நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. கா.த. தருமலிங்கம் (அதிபர்) செயலாளர் திரு. எஸ். தில்லைநாதன், உபசெயலாளர் திரு. க. இரத்தினசபாபதி: பொருளாளர், திரு. ச. சதாசிவம்.

மேற்படி சபைக்கு 11 செயற் குழுவினரும் தெரிவு செய்யப்பட்டனர்

(இ-131)

## 5ஆவது ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்: 1956-07-09

இறைவன் அடியில்: 1983-08-04



திருமதி காமினி பியாற்றிஸ் எதிர்மனசிங்கி

ஐந்தாண்டு சென்றாலும்
ஆறாது மகளே எம் துயரம்;
சீராக வளர்த்தும்மை
சிதைத்திட்டோமே ஜேர்மனியில்,
பேராகவந்த பெருமகனை நீர்மணந்து,
அவர் மாறாததுயர்கொள்ள
மறைந்தாயோ எம் மகளே;
உம்மை உதிரத்தில் தாங்கிய
அன்னைமனம் வெந்து நிற்க,
அமரத்துவம் எய்தினயோ
அருமை மகளே !
தன் இதயத்தில் உனைவளர்த்த,
தந்தையையும் நீர் மறந்தனையோ ?
எமதம்மா யாரென்று ஏங்கிநிற்குமுன்
சிறார்களுக்கு
எம் என்னபதில் சொல்வதென
ஏங்கித் தவிக்கின்றோமே!
உமக்கு நாம் தரும் அர்ப்பணமாயிதை ஏற்று
அமைதி கொள்வாய் அன்புமகள்
காமினியே !

உமது பிரிவால் துயருறும்,
உமது அன்புக் கணவர், பிள்ளைகள்,
ஆசைப் பப்பா, மம்மி, உடன் பிறந்தோர்,
மாமா, மாமி, மச்சான்மார், மச்சாள்.

இல: 100, 'பூமகாள்',
4ஆம் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

(5406)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

பகையகத்துச் சாவார் எளியர் அரியர்
அவையகத்து அஞ்சா தவர்.

**பொருள்:**

பகைவர் உள்ள போர்க்களத்தில் (அஞ்சாமல் சென்று) சாகத் துணிந்தவர் உலகத்தில் பலர்; கற்றவரின் அவைக் களத்தில் அஞ்சாமல் பேசவல்லவர் சிலரே.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22703
04-08-1988 த. பெ. இல. 23


# இந்தச் சித்திரவதை தொடர வேண்டுமா?

யாழ்ப்பாணத்தில் உள்ள ஆசிரியர்களுக்கு கொழும்பு கல்வி அமைச்சில் இருந்து அனுப்படும் கடிதங்கள் தனிச் சிங்களத்தில் இருக்கின்றன. அதனால் இப்பகுதி ஆசிரியர்கள் வேண்டிய பதில்களை அல்லது நடவடிக்கைகளை உரிய காலத்தில் அனுப்ப முடியாமல் அல்லது மேற்கொள்ள முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். இவ்வாறு ஒரு செய்தி நேற்றைய உதயனில் வெளியாகி உள்ளது.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பார்கள். ஸ்ரீலங்கா அரசாங்கம் இன்னமும் தமிழ் மக்களுடன் அவர்களுக்குத் தெரியாத மொழியில்தான் கடிதத் தொடர்பு வைத்து வருகிறது என்பதற்கு ஆசிரியர் விவகாரம் ஓர் உதாரணம் மட்டுமே.

ஸ்ரீலங்கா அரசாங்கம் கொழும்பிலிருந்து அனுப்பும் சகல கடிதங்களும் இப்போது தனிச் சிங்களத்திலேயே வருகின்றன. தொழில் திணைக்களத்தில் இருந்து கிடைக்க வேண்டிய கொடுப்பனவு சம்பந்தமாக அன்பர் ஒருவருக்குக் கிடைத்த கடிதம் தனிச் சிங்களத்தில் மட்டும் இருப்பதை நேற்றுக் காட்டி அங்கலாய்த்தார் அவர். அதனை வாசித்து விளங்கப்படுத்துவதற்கு நன்றாகச் சிங்களம் தெரிந்தவர்கள் யாரும் இருக்கிறார்களா என்று கேட்டபோது, பார்க்கப் பரிதாபமாக இருந்தது!

இப்படி நாளாந்தம் நூற்றுக்கணக்கானோர், ''உத்தியோக மொழி''யில் மட்டும் தமக்குக் கிடைக்கும் கடிதங்களை வைத்துக் கொண்டு தலையைப் பிய்த்துக் கொள்கிறார்கள் என்கின்றன எமக்குக் கிடைக்கும் தகவல்கள்!!

1956 இல் தனிச்சிங்களம் உத்தியோக மொழியாகியதில் இருந்து பிடித்த சனியன், தொல்லை, இன்னமும் தமிழனை விட்டுப் போன பாடாக இல்லை.

இடையில் 'நியாயமான தமிழ்மொழி உபயோகம்' என்று கூறித் தமிழ்மொழி பெயர்ப்பாவது வந்தது.

இப்போது தமிழும் உத்தியோக மொழியாக்கப்படுகிறது என்று எழுத்தில் இருந்தாலும் (இன்னும் சட்டமாகவில்லை என்பது உண்மை நிலை) மீண்டும் தமிழர்கள் மீது சிங்களம் முழு அளவில் திணிக்கப்படுகிறது.

மொழித் திணிப்பும் அடிப்படை உரிமை மீறலே என்பதைச் சிங்கள அரசுகள் புரிவதாக இல்லை. ஒருவனுக்கு விளங்காத மொழியில் கடிதம் எழுதி அவனிடம் பதில் கேட்பது உடல் ரீதியாகச் செய்யப்படும் சித்திரவதையை விட மோசமானது. மிகப் பெரும் சித்திரவதை. அந்தச்சித்திரவதையை தொடரவே அரசு விரும்புகிறது.

சிங்களத் திணிப்புக் குறித்து கடந்த மாதம் 13 ஆம் திகதியும் 'நம்பவேண்டுமா?' என்ற தலைப்பில் இப்பத்தியில் விவரமாக எழுதியிருந்தோம்.

தமிழர்களுக்கு உரிமைகள், சலுகைகள் எல்லாம் வழங்கப்போவதாகக் கூறும் ஐ.தே.க. அரசாங்கம், இந்தக் கட்டத்தில் நூற்றுக்கு நூறு வீதம் சிங்களத் திணிப்பில் மும்முரமாக இருப்பதன் நியாயம் என்ன? மர்மம் என்ன?

தமிழர்களும் இந்நாட்டு மக்கள், அவர்கள் இதயங்களைக் கவரவேண்டும் என்று எண்ணிச் செயற்படுவதற்கு மாறாக —

அதற்கு நேர்மாறாக —

ஜே. ஆர். அரசு நடப்பது ஏன்?

தமிழ் மொழி அமலாக்கத்திற்கென்று ஓர் அமைச்சு நிறுவப்பட்டு ஆண்டுகள் சுமார் பத்தாகியும் ''நியாயமான அளவு தமிழ் உபயோகத்தை'' அமுல் செய்ய முடியவில்லை என்றால் அர்த்தம் என்ன?

எல்லாம் வெளிப்பேச்சும், வேஷமுமே அன்றி வேறென்ன?

தமிழர்களின் உரிமைகள், பிரச்சினைகள் விடயத்தில் ஜே. ஆரும், யு என். பி யும் என்றுமே பசுத்தோல் போர்த்த புலிகள் என்பது உலகத்துக்குப் புரியாவிட்டாலும் தமிழர்களுக்கு நன்கு தெரியும். அவ்வளவு தான்!

# இரசாயன ஆயுதம் ஈராக் பாவித்தது!

ஐ.நா, ஆக 3

வளைகுடா யுத்தத்தில் இரசாயன குண்டுகளை ஈராக் பாவித்துள்ளது என்று ஐ.நா கமிட்டி தெரிவித்தது.

அதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளதாக அக் கமிட்டி கூறியது.

ஈரான் பாவித்ததா? இல்லையா? என்பது பற்றி கமிட்டி தனது அறிக்கையில் எதையும் தெரிவிக்கவில்லை. (எ)

# பதவி வெறி பிடித்து அலைகிறார் ஜெயலலிதா!
# வெளியேற்றப்பட்ட திருநாவுக்கரசு வர்ணனை!!

சென்னை, ஆக. 3

தமிழகம் இதுவரை கண்டிராத மிக (Cost'y) 'கோஸ்ட்லி'யான அரசியல் தலைவர் ஜெயலலிதா தான். யதார்த்தங்கள் ஜெயலலிதாவுக்குப் புரியவில்லை. தலைவரின் கூட்டம்தான் தனக்கு வருகிறது என்பதை மறந்து, தன்பின்னால் தமிழக மக்கள் திரள்கிறார்கள் என்று அவர் தப்புக் கணக்குப் போடுகிறார். முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரசு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும்சொன்னதாவது:

மொத்தக்கில் கட்சி நடத்தும் பண்போ, ஒரு ஆட்சியின் தலைவராக, தமிழகத்தின் முதல்வராக வரக்கூடிய மனப்பக்குவமோ ஜெயலலிதாவுக்கு இல்லை!

பதவியைப் பிடிக்க வேண்டுமென்கிற வெறி மட்டும் ஜெயலலிதாவுக்கு உண்டு. ஆனால் அதற்கான ராஜதந்திரமோ, அரசியல் அறிவோ, பக்குவமோ பண்போ கிடையாது.

அவர் ஆட்சி அமைத்தாலும், அந்த ஆட்சி மக்கள் விரோத ஆட்சியாகவே அமையும்.

ஒரு சர்வாதிகாரியின் கையில் தமிழகம் சிக்கி அலங்கோலமாகக் கூடாது என்பதைச் சரியான தருணத்தில் நாங்கள் புரிந்து கொண்டோம்.

கடந்த ஏழுமாத அனுபவத்தில் ஜெயலலிதாவை நன்றாகப் புரிந்துகொண்டோம். இனிமேல் அவரைப் பொய்யாகப் புகழ்ந்து கட்சித் தொண்டர்களையும், நாட்டு மக்களையும் நாம் ஏமாற்ற விரும்பவில்லை.

ஜெயலலிதாவின் குணங்களைப் புரிந்து தான் தலைவர் அவரை வைக்கவேண்டிய இடத்தில் வைத்தார். தலைவர் செய்யத் துணியாத காரியத்தை நாங்கள் செய்யத் துணிந்தோம்.

புரட்சித் தலைவரின் ஆத்மா எங்கள் மீது கோபங்கொண்டு, எங்களை ஏழு மாதங்களாக ஆட்டிப் படைத்தது இப்போது அவரது ஆத்மா எங்களுக்கு நல் வழி காட்டியுள்ளது.

ஏழுமாதம் செய்த தவறுக்கு மக்களிடம் மன்னிப்புக் கோருகிறோம்.

தலைவர் படத்தின் பாடல் ஒன்று;

'தவறு செய்தவன்
திருந்தியாகணும்!
தப்பு செய்தவன்
வருந்தியாகணும்!'

கடந்த ஏழுமாதங்கள் தவறு செய்தோம். திருந்திவிட்டோம். தப்பு செய்தோம், அதற்காக வருந்துகிறோம்!

இப்படி திரு. திருநாவுக்கரசு தெரிவித்தார். (எ)

## பெண்களையும் பிஷப்புகளாக நியமிக்க ஆங்கிலிக்கன் திருச்சபை அங்கீகாரம்

லண்டன், ஆக. 3

பெண்களையும் பிஷப்புகளாக நியமிக்க ஆங்கிலிக்கன் திருச்சபை மாநாடு அனுமதி வழங்கி விட்டது.

**வெளி உலகில்**

லண்டனில் நேற்று நடைபெற்று முடிந்த இம்மாநாட்டில் அனுமதி வழங்கும் தீர்மானம் 423 வாக்குகள் பெற்று நிறைவேற்றப்பட்டது. எதிர்த்து 28 வாக்குகள் மட்டுமே கிடைத்தன.

உலகில் உள்ள ஆங்கிலிக்கன் திருச்சபைகளைச் சேர்ந்த 500 பிஷப்புகள் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

உலகில் ஏற்கனவே ஐந்து ஆங்கிலிக்கன் திருச்சபைகள் பெண் பிஷப்புகளை நியமித்து வருகின்றன.

மாநாட்டில் மூன்றுவது உலக நாடுகளைச் சேர்ந்த பிஷப்புகள் பெண்கள் நியமிக்கப்படுவதை எதிர்த்தனர்.

தென் ஆபிரிக்க பிஷப் டெஸ்மண்ட் டுட்டு பெண்கள் நியமிக்கப்படுவதை ஆதரித்தார்.

அப்படி பெண்கள் நியமிப்பதை எதிர்ப்பது அவர்களுக்கு சமூகத்தில் சமய, கலாசாரத் துறையில் சம அந்தஸ்து கொடுப்பதை எதிர்ப்பதாக முடியும் என்று வண. டுட்டு தெரிவித்தார். (எ)

## ராஜீவைக் கொல்ல சர்வதேச மட்டத்தில் சதி
## இந்திய நாடாளுமன்றத்தில் அரசு அறிக்கை

புதுடில்லி, ஆக 3

பிரதமர் ராஜீவ் காந்தி, உள்துறை அமைச்சர் பூட்டாசிங் ஆகியோரைக் கொல்ல சர்வதேச மட்டத்தில் சதி நடந்திருக்கிறது

பாகிஸ்தானுக்கும் அதில் தொடர்பு உண்டு என்று இந்திய அரசு அறிவித்துள்ளது.

இந்திய நாடாளுமன்றத்தின் இரண்டு சபைகளிலும் மத்திய அரசின் அறிக்கை ஒன்று நேற்று சமர்ப்பிக்கப்பட்டது.

இச்சதிச் செயல்பற்றி உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளைத் தொடர்ந்து, இணை அமைச்சர் ப சிதம்பரம் லோகசபையிலும் இன்னொரு இணை அமைச்சர் சாதேவ் ராஜ்யசபாவிலும் அறிக்கை சமர்ப்பித்தனர்.

அந்த அறிக்கைகளில் இச்சதி முயற்சி சர்வதேச மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டதுஎன்ற தகவல் வெளியிடப்பட்டது.

பாகிஸ்தான் ஊடாக இச்சதியைச் செயல்படுத்த திட்டமிட்டிருந்ததாகவும் அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. (எ)

**உதைபந்தாட்டம்:**

## குழப்பம் செய்த ரசிகர்களுக்கு லண்டன் நீதிமன்றம் தண்டனை!

லண்டன், ஆக 3

கடந்த ஏப்ரலில் இடம்பெற்ற உதைபந்தாட்டப் போட்டி ஒன்றின் போது குழப்பம் விளைவித்த சுமார் 40 ரசிகர்களுக்கு லண்டன் நீதிமன்றம் ஒன்று நேற்று தண்டனை வழங்கியது.

மூன்று குழுக்களாக இந்த ரசிகர்கள் குழப்பம் விளைவித்தனராம்.

மூன்று குழுக்களின் தலைவர்களுக்கும் தலா 3 ஆண்டுகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

ஏனையோருக்கு தலா 20 ஆயிரம் பவுன் அபராதம் விதிக்கப்பட்டது.

உதைபந்தாட்டப் போட்டிகளில் திட்டமிட்டுக் குழப்பத்தை ஏற்படுத்துவதை இனியும் பொறுக்க முடியாது- இப்படி தண்டனை விதிக்கையில் நீதிபதி குறிப்பிட்டார். (எ)

## வளைகுடாவில் யுத்த நிறுத்தம் இன்னும் இழுபறி நிலையில்!

ஐ.நா. ஆக 3

வளைகுடாவில் யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வருவதற்கான காலக்கெடுவை அறிவிக்க ஐ.நா. பொதுச் செயலாளர் பெரஸ்டிகுயிலர் தயாராகி வருகிறார்.

அதற்கான பேச்சு வார்த்தைகளை அவர் தொடர்ந்து நடத்தி வரும் அதே வேளையில் யுத்த நிறுத்தத்தை குழப்பும் விதத்தில் ஈரானும், ஈராக்கும் நடந்து வருகின்றன என்று அறிவிக்கப்படுகின்றது.

மீண்டும் தீவிரமாக யுத்தம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு கால அவகாசத்தைப் பெறுவதற்கே யுத்த நிறுத்த உபாயத்தை ஈரான் பின்பற்றுவதாக ஈராக் அறிவித்துள்ளது.

ஈராக்கின் பேச்சு, யுத்த நிறுத்தத்தை உணர்வுபூர்வமாக அமுல் நடத்த உதவுமா என்பதில் சந்தேகத்தை ஏற்படுத்தி இருப்பதாக ஈரான் கருதுகிறது. (எ)

## நாவலர் அறிக்கை

சென்னை, ஆக. 3

செல்வி ஜெயலலிதாவினால் கட்சியை நிலையாக நடத்த முடியாது. நாவலர் நெடுஞ்செழியன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அ. தி. மு. க. வில் இருந்து பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதாவினால் வெளியேற்றப்பட்ட பின்னர் திரு. நெடுஞ்செழியன் இந்த அறிக்கையை வெளியிட்டார். (ஒ-எ)

## கழிவுப்பொருள் அகற்றுதல்

லேகோஸ், ஆக 3

நைஜீரியக் கரையோரத்தில் கொட்டப்பட்ட இரசாயனக் கழிவுப் பொருள்களை அகற்றுவதில் இத்தாலிய அரசு ஈடுபட்டிருக்கிறது.

4 ஆயிரம் மெட்ரிக் கொன் கழிவுப்பொருள்களை இத்தாலிய நிறுவனம் ஒன்று நைஜீரியக் கரையில் கொட்டியிருந்தது.

இது நைஜீரியாவில் பெரிய பிரச்சினையை ஏற்படுத்தியது.

கழிவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டுவர இத்தாலிய அரசு இரண்டு கப்பல்களை நைஜீரியாவுக்கு அனுப்பிவைத்துள்ளது. (எ)

## சீனா கண்டனம்

பீகிங், ஆக 3

சம்பூச்சியாப் பிரச்சினை பற்றி நடந்து முடிந்த பேச்சுக்கள் குறித்து வியட்னாம் மீது சீனா கண்டனம் தெரிவித்து உள்ளது.

கெமரூச் இயக்கத்திற்கு வெளிநாடுகள் வழங்கும் உதவிகளையும் கம்பூச்சியாவிலிருந்து தனது துருப்புக்களை விலக்கிக் கொள்வதையும் இணைத்து தீர்வுகாண முயல்வதாக சீனா வியட்னாம் மீது குற்றஞ் சாட்டியிருக்கிறது. இதனை வியட்னாம் அரசு மறுத்துள்ளது (எ)

யாழ் மாவட்டத்தில்

# கருவல் நோய் காரணமாக திராட்சைக்கொடி பாதிப்பு

மானிப்பாய், ஆக. 4

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் திராட்சைச் கொடிகளை 'கருவல்' என்ற நோய் பாரிய அளவில் தாக்கிவருவதனால் திராட்சைச் செய்கையாளர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

இந்நோய் பரவாமல் தடுப்பதற்கான வழிகளைக்கண்டறிவதில்யாழ்ப்பாண மாவட்ட விவசாயத் திணைக்களவிவசாய ஆராய்ச்சிப் பகுதி ஆகியவற்றைச் சேர்ந்தஉத்தியோகத்தர்கள் முயன்று வருகின்றனர்.

யாழ்ப்பாண மாவட்ட விவசாயப் பணிப்பாளரின் வேண்டுகோளுக்கிணங்க, யாழ் மாவட்ட விவசாய ஆராய்ச்சிப் பகுதி உத்தியோகத்தர்கள் கருவல் நோய்க்கான காரணத்தை கண்டறிவதில் பரிசோதனைத் துண்டங்களை அமைத்து பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கீரிமலை, உடுவில், பருத்தித்துறை, புத்தூர் போன்ற விவசாய போதனாசிரியர் பகுதிகளில் இந்த ஆராய்ச்சி வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆராய்ச்சி வேலைகள் வெற்றி அளித்து வருவதாகவும், எதிர்காலத்தில் அது நல்ல பலனை அளிப்பதோடு விரைவில் கருவல் நோய் அழிக்கப்பட்டுவிடும் எனறும் விவசாயப்பகுதி உத்தியோகத்தர் ஒருவர் உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார். (இ- 90)

## திருமலை இணைப்பதிகாரியின் இடமாற்றத்துக்கு தாக்குதல் சம்பவம் காரணம்?

திருகோணமலை, ஆக. 4

திருகோணமலையின் இணைப்பதிகாரி பிறிகேடியர் டென்சில்கொப்பேகடுவ திடீரெனக் கொழும்பிற்கு மாற்றலாகியுள்ளார்.

குண்டுவெடித்த தினமான கடந்த 21ஆம் திகதி கச்சேரிக்குள்ளும் வெளியேயும் இடம் பெற்ற சம்பவங்களின் பின்னரே இவரது இடமாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கச்சேரி அமைந்துள்ள பிறட்ரிக்கோட்டை வி[illegible]தான் இலங்கை இராணுவத்தின் காரியாலயம், தங்குமிடம் ஆகியன அமைந்துள்ளன-

அத்துடன் கோட்டை வாசலிலும் உள்ளேயும் வெளியேயும் இலங்கை இராணுவத்தினரே பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

அப்படியிருக்க அன்றைய தினம் மூன்று தமிழர்கள் வெட்டிக் கொல்லப்பட்டனர். ஒருவர் இழுத்துச் செல்லப்பட்[illegible] ஒரு கோஷ்டி புகுந்து [illegible] தாக்க முற்பட்டது.

## விவசாயக் கல்வி சுற்றுலா

மானிப்பாய், ஆக. 4

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை மாணவர்கள் விவசாயக் கல்வி சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு திருநெல்வேலி மாவட்ட விவசாய அரசாங்க பண்ணை, சுன்னாகம் டபிள் எஸ்.ஏ. பாம் ஆகியவற்றுக்குச் சென்றனர்.

டபிள் எஸ். ஏ. பாம் பொது முகாமையாளர் திரு. பா. சுதர்சன், பண்ணை முகாமையாளர் திரு. சபாரத்தினம் மாணவர்களுக்கு தேவையான விளக்கங்களை அளித்தனர்.

மானிப்பாய் கல்விவட்டார விவசாயக் கல்வி ஆலோசகர் திரு. கே. செல்வக்குமாரன், ஆசிரியர் திரு. வி. பரிபூரணனந்த சர்மா ஆகியோர் மாணவர்களை பண்ணைகளுக்கு அ[illegible]த்துச் [illegible]னர். (இ-90)

## ''நிழல்கள்'' நூல் வெளியீடு 7 ஆம் திகதி

பருத்தித்துறை, ஆக 4

யதார்த்தா கலை இலக்கிய வட்டத்தின் ஆதரவில் வெளியிடப்படும் செல்வி சந்திரா தியாகராசாவின்'நிழல்கள்'நூல் வெளியீட்டு விழா 7 ஆம் திகதி காலை 9.00 மணி அளவில் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் யதார்த்தா கலை இலக்கிய வட்டத் தலைவர் டாக்டர் எம். கே. முருகானந்தன் தலைமையில் நடைபெறும்.

இரா. சந்திரசேகரன் வரவேற்புரையுடன் ஆரம்பமாகும் இந் நூல் வெளியீட்டு விழாவில் வடமராட்சி கோட்டக் கல்வி அதிகாரி செல்வி தி பெரிய தம்பி நூலை வெளியிட்டு வைப்பார். முதலாவது பிரதியை பருத்தித் துறை தகன் ஸ்ரூடியோ உரிமையாளர் திருமதி வனிதா ஸ்ரீபவன் பெற்றுக்கொள்வார்.

''அலை'' ஆசிரியர் திரு. ஏ. யேசுராசா நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் கும்பிளான் ஐ. சண்முகன், திருமதி கோகிலா மகேந்திரன் ஆகியோர் ஆய்வுரைகளை நிகழ்த்துவார்கள்.

''நம் மிடையேயுள்ள பெண் எழுத்தாளர்களும் நமது இலக்கிய உணர்வுகளும்'' என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பீடத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி சிறப்புரையாற்றுவார். (இ-118)

# சமய சந்நிதிகளில்

## நாவாந்துறை பரலோகமாதா உற்சவம்

குருநகர், ஆக- 4

நாவாந்துறை, புனித பரலோகமாதா ஆலய வருடாந்த திருநாள் கொண்டாட்டங்கள் எதிர்வரும் 6 ஆம் திகதி கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகும்.

தினமும் மாலை 4-மணிக்கு செபமாலையுடன் ஆரம்பமாகும் ஆராதனைகள் அருட்தந்தை திருப்பலி ஒப்புக் கொடுத்தலுடன் நிறைவுபெறும்.

14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நற்கருணை ஆராதனை இடம் பெற்று சற்பிரசாத சுற்றுப் பிரகாரம் நடைபெறும்.

15 ஆம் திகதி திங்கட் கிழமை காலை 7 மணிக்கு திருநாள் பாடல் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பிற்பகல் 3 மணிக்கு திருச் சொரூப ஊர்வலம் நடைபெற்று சொருப ஆசிர்வாதத்துடன் கொண்டாட்டங்கள் நிறைவடையும். (இ-51)

## 7 ஆவது குருபூசை

திருக்கேதீஸ்வரம் திருவாசகம் ஸ்ரீமத் சபாரத்தின சுவாமிகளின் 7 ஆவது குருபூசை இன்று 4 ஆம் திகதிமாலை 3 மணிக்கு நடைபெறும்.

சுவாமிகள் சமாதி அடைந்த விதானையார் வீதி சுண்டிக்குளி இல்லத்திலேயே பூசை நடைபெற உள்ளது. (சி)

## கார்த்திகைத் திருவிழா

காங்கேசன்துறை, ஆக 4

பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் கந்த சுவாமி கோயில் உற்சவத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை கார்த்திகைத் திருவிழா நடைபெறவிருக்கிறது.

அன்று கூடும் பக்தர்களின் வசதிக்காக விசேஷ போக்குவரத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

உற்சவ ஏற்பாடுகளை ஆலய ஆதீனகர்த்தா மஹாராஜபதி சு. து. ஷண்முகநாதக் குருக்கள் செய்து வருகிறார். (இ-68)

## விசேஷ பூசை

பருத்தித்துறை, ஆ 3

பருத்தித்துறை அருள்மிகு வராத்துப்பளை காத்தவராயர் ஆலயத்தில் நாட்டில் அமைதி ஏற்பட்டு சுமுகநிலை தோன்ற வேண்டுமென இறைவனை வேண்டி விசேஷ பூசைகள் ஆராதனைகள் அண்மையில் நடத்தப்பட்டன.

அடியார்களின் காவடி கரக ஆட்டங்களும் இடம் பெற்றன.

இவ் விசேஷ பூசைகள் ஆராதனைகளை அடுத்து ஆலய முன்றலில் அன்றிரவு முருகப் பெருமானின் ஸ்ரீவள்ளி புராண நாடகம் வட இலங்கைப் பண்பாட்டுக் கழகச் செயலாளரும் பருத்தித்துறை இந்து இளைஞர் சங்கச் செயலாளருமான திரு. ஏ. என். எஸ். திருச்செல்வம் தலைமையில் நடைபெற்றது.

திரு. திருச்செல்வம் நாடகத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றினார். (இ-118)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சேட்டிங்ஸ் ★ சூட்டிங்ஸ்
★ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
★ றெடிமேட் ஆடைகளுக்கும்
யாழ்நகரில்

மயூரா சென்ரர்
13 B, நவீனசந்தை. :-: யாழ்நகர்.

# உதயன்

04 - 08 - 1988 வியாழக்கிழமை

திருமண வைபவங்களுக்கேற்ற
★ மணிப்புரி
★ காஞ்சிபுர ★ பெனரஸ்
சேலைகளைப் பெற்றுக்கொள்ள

மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, :-: யாழ்நகர்.

இந்திரா காந்தி கொலை வழக்கு:

# மரணதண்டனைவிதிக்கப்பட்ட மூவரில் ஒருவர் விடுதலை

## சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு

புதுடில்லி, ஆக. 4

இந்திராகாந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட மூன்று எதிரிகளில் ஒருவரை விடுதலை செய்யும்படி புதுடில்லி சுப்ரீம் கோர்ட் நேற்று உத்தரவிட்டது.

ஏனைய இரண்டு எதிரிகள் மீதான மரண தண்டனை ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

30-10-84இல் இந்திரா காந்தியைச் சுட்டுக் கொலை செய்தது, கொலை செய்யச் சதி செய்தது, அதற்கு உடந்தையாக இருந்தது ஆகிய குற்றச்சாட்டுக்கள் மீது சத்வன் சிங், கேஸர்சிங், பல்பீர் சிங் ஆகியோர் மீது குற்றஞ் சாட்டியிருந்த வழக்கில் மூவருக்கும் கீழ்க் கோர்ட் மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

இது சம்பந்தமான அப்பீல் விசாரணை முடிவடைந்து சுப்ரீம்கோர்ட் நேற்றுத் தீர்ப்பு வழங்கியது.

200 பக்கங்கள் கொண்ட தீர்ப்பில் முதல் இரண்டு எதிரிகளான சத்வன்சிங், கேஸர்சிங் ஆகியோருக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனை ஊர்ஜிதம் செய்யப்பட்டது. மூன்றுவது எதிரி பல்பீர்சிங்குக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை ரத்துச் செய்யப்பட்டது.

உடனடியாக அவரை விடுவிக்கும்படியும் உத்தரவிடப்பட்டது.

''ஆயுதமற்ற அப்பாவி பெண்ணுக்கு பாதுகாவலாக நியமிக்கப்பட்டவர்களே இப்படுபாதகச் செயலை செய்தது அதிர்ச்சி தருகிறது''—என்று நீதியரசர்கள் தீர்ப்பில் தெரிவித்தனர்.

முதல் எதிரி சத்வன் சிங், இந்திரா காந்தியின் மெய்ப்பாதுகாவலரில் ஒருவர். இரண்டாவது எதிரியான கேஸர் சிங், அரசு அதிகாரி ஆவார்.

விடுதலை செய்யப்பட்ட பல்பீர்சிங்கும் மெய்ப் பாதுகாவலர் ஆவார். (ஒ-எ)

அத்துமீறி விமானத்தை இறக்கிய

# ஜேர்மன் இளைஞனுக்கு சோவியத் மன்னிப்பு!

மாஸ்கோ, ஆக. 4

சோவியத் வான் எல்லைக்குள் அத்துமீறி விமானத்தைச் செலுத்தியதற்காகச் சிறை வைக்கப்பட்டிருந்த மேற்கு ஜேர்மனி பிரசையான மத்தியாஸ்றூஸ்ட் என்ற இளைஞனுக்கு சோவியத் அரசு மன்னிப்பு வழங்கியது.

அவரை சில தினங்களில் சோவியத் அரசு நாடு கடத்தும் என்றும் அறிவிக்கப்பட்டது.

14 மாதங்களுக்கு முன்னர் மத்தியாஸ் றூஸ்ட் விமானம் ஒன்றில் சென்று கிரெம்ளின் மாளிகை அருகில் செஞ்சதுக்கத்தில் இறங்கினர்.

நீதிமன்ற விசாரணையின் பின்னர் இவருக்கு 4 ஆண்டுகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

நாடுகளுக்கு இடையே புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்காகவே இப்பயணத்தை மேற்கொண்டதாக விசாரணையின்போது மத்தியாஸ்றூஸ்ட் தெரிவித்தார்.

இப்போது சோவியத் அரசு, அவருக்கு மன்னிப்பு அளித்து விடுதலை செய்து உள்ளது. (ஒ-எ)

# புதுடில்லியின் கவர்னராக பண்டாரி

புதுடில்லி, ஆக. 4

புதுடில்லியின் லெப்டினன்ட்கவர்னராக திரு. ரொமேஷ் பண்டாரி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

வாந்தி பேதி நோய் புதுடில்லியில் பரவியதற்கான தார்மீகப் பொறுப்பை ஏற்பதாகக் கூறி லெப்டினன்ட் கவர்னர் பதவியில் இருந்து திரு. சபூர் அண்மையில் ராஜினாமாச் செய்திருந்தார்.

அந்த இடத்துக்கே திரு. ரொமேஷ் பண்டாரி தற்போது நியமிக்கப்பட்டிருக்கிறார். (ஒ-எ)

# இன்று ராஜீவ் தமிழ் நாட்டில்

சென்னை, ஆக. 4

பிரதமர் ராஜீவ்காந்தி 3 நாள் பயணம் ஒன்றை மேற்கொண்டு இன்று மாலை தனி விமானத்தில் சென்னை வருகிறார்.

பின்னர் விசேட ஹெலிக்கொப்டர் ஒன்றில் செஞ்சியில் உள்ள ராஜா தேசிங்கு கோட்டைக்கு விஜயம் செல்வார். (ஒ-எ)

## அமைதிப்-----

தவறு. அங்கு மீளக் குடியமர்த்தல் பணிகளே நடக்கின்றன. ஏன், ஒப்பந்தத்திலேயே மீளக் குடியமர்த்தலுக்கு வகை செய்யப்பட்டிருக்கிறது—

பொதுத் தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் நடக்க வேண்டும் என்பது அரசமைப்பு விதி. அதற்கு இணங்க ஜனாதிபதித் தேர்தல் முதலில் நடத்தப்படும்.

இவ்வாறு திரு. ஜெயவர்த்தன தமது பேட்டியின் போது கருத்து வெளியிட்டார். (அ)

# மரண அறிவித்தல்கள்

## சட்டத்தரணி சதா ஸ்ரீநிவாசன்

சட்டத்தரணி சதா ஸ்ரீநிவாசன் (முன்னாள் D. R. O.) காலமாகிவிட்டார். இவர் செல்வநாயகியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திரு. திருமதி சதாசிவம் பிள்ளையின் (கொக்குவில்) அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற திரு. திருமதி பூலோகசிங்கத்தின் (சாவகச்சேரி) அன்பு மருமகனும், காலஞ்சென்ற இரத்தினம்மா, நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், கலாநிதி, Dr. நிர்மலா (விரிவுரையாளர் C. N. M. C.) மகேந்திரவர்மன் (பொறியியலாளர் (Prima). மாலினி (விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பிரிவு), சாந்தினி, விஜயவர்மன் (Canada) ரவிவர்மன், காலஞ்சென்ற நிரஞ்சன ஆகியோரின் அன்புத் தந்தையும், நரேந்திரன் A. G. M. (பொறியியல் துறை R. V. D. B.) பசில் பெஞ்சமின் (பொறியியலாளர்), ரவிந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், அரவிந்தன், ஆனந்தி, ஷோபனா, அர்ச்சுனன், அரவிந்தன், பிரஹான்ராஜ், வனேஜினியா ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 51/8 செட்டித் தெரு நல்லூரிலுள்ள இல்லத்தில் இன்று (4-8-88) வியாழக்கிழமை நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக 2 மணியளவில் கொக்குவில் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
மகேந்திரவர்மன்
(மான்)

(5443)

## திருமதி ஆறுமுகம் மகேஸ்வரி (கனகம்மா)

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் வவுனியாவில் தற்போது வசித்தவருமான மகேஸ்வரி ஆறுமுகம் காலமானார். இவர் பிரபல வர்த்தகர் ஆறுமுகத்தின் (வவுனியா) அருமை மனைவியும், இந்திரகுமார் (ஒப்பந்தக்காரர் வவுனியா), பாமா (ஜேர்மனி), பிறேமா (ஆசிரியர் வவுனியா), அருள்குமார் (லண்டன்) ஆகியோரின் தாயாரும் காசிப்பிள்ளை (வவுனியா வர்த்தகர்), கனகரட்ணம் (வவுனியா வர்த்தகர்), காலஞ்சென்ற மார்க்கண்டு (புகையிரத நிலைய அதிபர்), காலஞ்சென்ற முருகேசு, சபாரட்ணம் (அமெரிக்கா), திருமதி நாகலிங்கம் ஆகியோரின் சகோதரியும் மேனகா, விக்கினேஸ்வரன் ஆகியோரின் மாமியாரும் நிருஷன், நிசந்தலா, நிரோசினி, பிரகாஷ், பிரதீஸ், ஆகியோரின் பேர்த்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் வவுனியாவில் நடைபெறும்.

தகவல்:
ரவி.

(5582)

## திரு. முத்துத்தம்பி அருணசலம்

கொக்குவில், யாழ்ப்பாண இந்துக்கல்லூரி இளைப்பாறிய ஆசிரியரும், கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவருமான திரு. முத்துத்தம்பி அருணசலம் 28/7/88 இல் தென் ஆபிரிக்காவில் காலமானார்.

இவர் ஆனைக்கோட்டை செல்லம்மாவின் அன்புக் கணவரும், சிவதொண்டன் (பணிப்பாளர் Whittall Boustead) நாகேஸ்வரி, உமாசேஸ்வரி (பல் வைத்தியர்) அருணோதயம் (பட்டயக் கணக்காளர்) ஆகியோரின் அருமைத் தந்தையாரும், Dr தயாநிதி சிவதொண்டன் (சிரேஸ்ட விரிவுரையாளர் வட கொழும்பு மருத்துவக் கல்லூரி) சொலமன மேதர் (பல் வைத்தியர்), அன்ரன் டி அல்மேடா ஆகியோரின் அன்பு மாமனாரும், வானகி, சிவசங்கர், சஞ்ஜீவன், ராதிகா, செல்வினி, கவிதா, ஈசன, மீரா, அருண், நிர்த்தன் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும், S.m ஆறுமுகம் (இளைப்பாறிய நீர்ப்பாசன இலாகா பணிப்பாளர்) அவர்களின் அருமைச்சகோதரரும் ஆனைக்கோட்டையைச் சேர்ந்தகாலஞ் சென்ற சட்டத்தரணி திரு நாவுக்கரசுவின அன்புமைத்துனரும் ஆவார்.

ஈமக் கிரியைகள் தென் ஆபிரிக்காவில் நடைபெற்றன.

தகவல்:-
சிவதொண்டன்

17/3 ஜோசப் லேன், கொழும்பு- 4

[5584]

யாழ் இந்து மைதானத்தில்

# ஷப்ரு கிண்ண கிரிக்கெட் ஆட்டம் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஆக. 4

'ஷப்ரு' கிண்ணத்திற்காக யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் மட்டுப் படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் சுற்றுப்போட்டி நாளை ஆரம்பமாகின்றது.

முதலாவது ஆட்டத்தில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மல்லாகம் சிவப்பு நட்சத்திர விளையாட்டுக்கழக அணி மோதும்.

இந்த ஆட்டம் நாளை காலை 9 மணிக்கு யாழ்-இந்துக்கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும்.

நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறும் ஆட்டத்தில் கிருஸ் ஹொப்பர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யங் பற்றீஷியன்ஸ் அணியும்—

மாலை நடைபெறும் போட்டியில் ஐந்து நட்சத்திர விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இளம் நட்சத்திர விளையாட்டுக்கழக அணியும் மோதுகின்றன.

ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறும் கிரிக்கெட் மோதலில் சென்ரலைட்ஸ் விளையாட்டுக்கழக அணியும் வட்டுக் கோட்டை ஓல்ட் கோல்ட்ஸ் அணியும் பங்குபற்றுகின்றன.

'ஷப்ரு' விளையாட்டுக்கழக அணியும், யாழ்-பல்கலைக்கழக அணியும் ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெறும் ஆட்டத்தில் மோதுகின்றன.

சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் காலை ஆட்டம் காலை 8 மணிக்கும், மாலை ஆட்டம் நண்பகல் 12.30 மணிக்கும் யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும்.

## வான் விற்பனைக்கு

இசுசு எல்வ் 250 ரக வான் — 60 ஸ்ரீ 5 ஆயிரம் இலக்கத் தொடரில்— விற்பனைக்கு உண்டு. பிரயாணிகள் ஏற்றிச்செல்ல உபயோகிக்கக் கூடியது. பின்வரும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்:

பி. சிவபாலன்
82, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(5447)

## Old Boys Association
of
St. Patrick's College, Jaffna
ANNUAL GENERAL MEETING
on Saturday 6th August 1988
at the O.B.A. premises commencing at 10-00 am
All Old Boys are cordially invited.

Rev. Fr. G. A. F. Joseph
President O.B.A.
Rector
St. Patrick's College.

59, St. Patrick's Road,
Jaffna, 3rd Aug., 1988. [5590]

யாழ்ப்பாண
## ஜெய்ப்பூர் செயற்கைக்கால் தொழிற்சாலை

கீழ்க்காணும் பதவிகளுக்கு தகுதியான விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. நிர்வாகச் செயலாளர் (Administrative Secretary) விண்ணப்பதாரிகள் கட்டாயமாக ஆங்கில மொழியிலும். ஆங்கில தட்டெழுத்திலும், கணக்கிடுதலிலும் தேர்ச்சி பெற்றவர்களாக இருத்தல் வேண்டும். அனுபவத்திற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
2. தொழில் நுட்பவியலாளர் (பயிலுனர் தரம்) (Technician Trainee) விண்ணப்பதாரிகள் தோல் வேலையில் முன் அனுபவம் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். அங்கக் குறைபாடு உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய கடைசித் திகதி; 12-08-1988.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய விலாசம்:

இல: 5, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

(5445)

## தமிழ் ஊழியர்கள்,,,.,..

பட்டு போதிய பாதுகாப்புத் தரப்பட வேண்டும்.

★ ஜூலை மாதச் சம்பளம் பெறாமலிட்ட ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

★ கஷ்டமான சூழ்நிலையில் கடமை புரியும் எங்களுக்கு ''விபத்தாபத்துப் பணம்'' Risk Allowance வழங்கப்பட வேண்டும்.

இதனிடையில்திருமலை பிரஜைகள் குழுத் தலைவர் திரு. பா. விஜயநாதன் கச்சேரியை கோட்டையிலிருந்து வெளியே எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்துள்ளார்.

இது சம்பந்தமாக திரு விஜயநாதன் உள்நாட்டு அமைச்சர், அரசாங்க அதிபர், இணைப்பதிகாரி ஆகியோருக்கு எழுதிய கடிதத்தில் 21ஆம் திகதியன்று இடம்பெற்ற சம்பவங்களை விளக்கியதுடன், அடுத்தநாள் நகர உதவி அரசாங்க அதிபர். திரு. ரி. கோணமலை கோட்டையிலுள்ள சிங்கள அகதிகளுக்கு நிவாரணப்பணம் வழங்கச் சென்ற போது பயமுறுத்தப்பட்டதாகவும் இனிமேல் கச்சேரிக்குக் காலடி எடுத்துவைக்கக் கூடாது என்று எச்சரிக்கை செய்யப்பட்டதையும் எடுத்துக் கூறியுள்ளார். (ஒ-150)

## இரவு----

ஆறு மணி வரையாகக் குறைக்கப்பட்டது.

மறு அறிவித்தல் வரை புதிய ஊரடங்கு நேரம் அமுலில் இருக்கும் என இந்திய அமைதிப்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஞாயிற்றுக் கிழமையிலிருந்து செவ்வாய்க்கிழமை வரை ஊரடங்கு நேரம் மாலை 6 மணி முதல் காலை 6 மணியாக இருந்தது தெரிந்ததே, (அ)

## வெளிநோயா....

யில் இருநூறு நோயாளர்களுமே தற்பொழுது வெளி நோயாளர் பகுதியில் சிகிச்சைக்காகப் பதிவு செய்யப்படுகின்றனர்.

முன்னர் தினமும் ஆயிரத்துக்கும் அதிகமான நோயாளர்கள் சிகிச்சைக்காக பார்வையிடப்பட்டுவந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ-10)

# சார்ஜண்ட் சுட்டுக்கொலை

கொழும்பு, ஆக 4

தென் மாகாணத்தில் பொலீஸ் சார் ஜண்ட் ஒருவரை ஜே. வி. பி. தீவிரவாதிகள் சுட்டுக் கொன்றனர் என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## மருத்துவ----

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பிக்க முடியும்என்ற நிலை முன்பு இருந்தது. எனினும் அத்தியாவசியமாக நிரப்பப்பட வேண்டிய ஐந்து பதிவாளர்களுக்கான வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப் படலாம் என்று தெரிய வந்துள்ளது.

வெற்றிடங்கள் நிரப்பப்பட்ட பின்னர் ஏனைய பிரிவுகளுக்கான விரிவுரைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படலாம் என்றும் தெரியவருகிறது. (அ-5)

# பாதிக்கப்பட்டோர் மறு-------

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

குறைவான வருமானம் பெறுகின்ற குடும்பங்களுக்கு வீடு திருத்துவதற்கும் புனரமைப்பதற்குமான நன்கொடைப் பொருள்களாக 15 ஆயிரம் ரூபா பெறுமதியான கட்டடப்பொருள்கள் வழங்கப்படும்.

★ 701 ரூபாவிற்கும் 1500 ரூபாவிற்கும் இடையிலான தொகையை மாதாந்த வருமானமாகப் பெறுகின்ற குடும்பங்கள் 15 ஆயிரம் ரூபாவிற்கு மேற்படாத தொகையைக்கடனாகப் பெறலாம்.

★ 1501 ரூபாவிற்தும் 5000 ரூபாவிற்கும்இடையிலான தொகையை மாதாந்த வருமானமாக பெறுகின்ற குடும்பங்கள் 50 ஆயிரத்துக்கு மேற்படாத தொகையைக் கடனாகப் பெறலாம்.

★ 5 ஆயிரம் ரூபாவிற்கு மேற்பட்ட தொகையை மாதாந்த வருமானமாகப் பெறுகின்ற குடும்பங்கள் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவிற்கு மேற்படாத தொகையைக் கடனாகப் பெறலாம்.

★ தொழில் முயற்சி பாதிக்கப்பட்டிருந் தால் பணமாகவோ அல்லது பண்டமாகவோ 4 ஆயிரம் ரூபா நன்கொடையாக வழங்கப்படும்.

மாதாந்த வருமானம் 2 ஆயிரத்து ஐநூறு ரூபாவிற்கு குறைவான வருமானம் பெறும் குடும்பங்களே இந் நன்கொடையை பெற முடியும்

★ தொழில் முயற்சியை மீண்டும் ஆரம்பிக்க 2 லட்சம் ரூபா வரை கடனாகப் பெற முடியும்-

இக்கடனை இலங்கை வங்கி, மக்கள் வங்கி, ஹட்டன் நாஷனல்வங்கி என்பன வழங்கும்.

★ இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பிய அகதிகளுக்கான உதவிகள், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகரால் உருவாக்கப்பட்டுள்ள விசேட உதவித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும்.

இந்த உதவிகளைத் தாமாகவே இலங்கை திரும்பும் அகதிகளும் பெற்றுக் கொள்ள முடியும்.

★ ஒருவர் உயிரிழந்தால் அவரது குடும்பத்துக்கு 25 ஆயிரம் ரூபா பண உதவியாக வழங்கப்படும்.

மேலும்பராயம் அடையாத நான்கு பிள்ளைகளுக்கு ரூபா 5 ஆயிரம் வீதம் வழங்கப்படும்.

பராயமடையாத ஒருவர் உயிரிழந்தால் 15 ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

★ வயதுவந்தவர் ஒருவர் ஊனமுற்ருல் ஆகக்கூடிய தொகையாக 25 ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

பராயமடையாத ஒருவர் ஊனமுற்ருல் ஆகக்கூடிய தொகையாக 10 ஆயிரம் ரூபா வழங்கப்படும். (அ-5)

## ஆசிரிய....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளதாகத் தமக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டிருப்பதாக சங்கச் செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கத்தின் மற்றுமொரு கோரிக்கையை ஏற்ற அமைச்சு, தற்போது கடந்த வருடம் வெளியேறிய ஆசிரிய மாணவர்களுக்கு பலாலி கோப்பாய் ஆசிரிய கலாசாலைகளில் விசேட துரித மீட்டல் வகுப்புக்களையும் நடத்த ஒழுங்குகள் செய்துள்ளதாகவும் அவர் வெளியிட்டுள்ள அறி[illegible] திருக்கிறார். (ஒ)

## மக்கள்----

மையான விவசாயக் கடன்களுக்கு விதிக்கப்படும் வட்டிவீதமே விதிக்கப்படும்.

கடன் வழங்கும் சேவை முதற்கட்டமாக வவுனியாவில் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அதன் பலாபலன்களைப் பொறுத்து ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஒ-9)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் பிறைவேற் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2, இலக்கத்தில். உள்ள அவர்களது அச்சகத்தில் 04 - 08 - 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Printed and Published by New Uthayan Publication (Pvt) Ltd 292/2, Navalar Road, Jaffna on Thursday 04 th August 1988.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org